egistered as a Newspaper in Ceylon ★ விலைசதம் 10

# ஈழநாடு

EELANADU

தபாற்பெட்டி எண். 49
போன் 389
National Tamil Daily
மலர் 10
இதழ் 116
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் இலை வைகாசி 24 ரபி: அவ் 9 வியாழக்கிழமை (6-6-68)

சுகாதார தளபாடங்கள்
(இலங்கை களிமண் கூட்டுத்தாபனம்)
முகங்கழுவும் பேசின்கள் 22"X15" (முழுவதும்) 112.00
மலகூட இருக்கைகள் 19" (மூடியுடன்) 65.00
இலங்கை களிமண் கூட்டுத்தாபனத்தால் நிர்ணயிக்கப்பட்ட விலைகளில் பெற்றுக் கொள்ளலாம்.
சிலோன் மேர்ச்சன்ட் லிமி.,
ஆஸ்பத்திரிவீதி யாழ்ப்பாணம்.
போன்: 234

அமெரிக்காவில் அண்ணன் கொலைக்குப்பின் தம்பியையும் கொல்லமுயற்சி

# ராபர்ட் கென்னடி சுடப்பட்டார் உயிருடன் போராடுகிறார்

## கழுத்திலும் தலையிலும் குண்டுகள் துளைத்தன

### சுட்டவன் பிடிபட்டான்; உலகில் அதிர்ச்சி

லொஸ்ஏஞ்சல்ஸ், ஜூன் 5

அமெரிக்காவின் அடுத்த ஜனாதிபதியாவார் என்ற நம்பிக்கையைப் பெற்ற செனட்டர் ரொபர்ட் கென்னடி இன்று அதிகாலை துப்பாக்கிச்சூட்டுக்கு இலக்கானார். நான்கு தடவைகள் சுடப்பட்ட திரு, ரொபர்ட் கென்னடி இரத்த வெள்ளத்தில் வீழ்ந்தார். மிக ஆபத்தான நிலையில் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ள செனட்டர் ரொபர்ட் கென்னடிக்கு அவசர சத்திரசிகிச்சை செய்யப்பட்டுள்ளது.

ஒரு சூடு கழுத்திலும் மற்றொருசூடு முதுகிலும் துளைத்தது. இச்சூட்டுச் சம்பவத்தைத் தொடர்ந்து அமெரிக்கநகரங்கள்பலவற்றிலும் அமைதியின்மை ஏற்பட்டுள்ளது. இச்சம்பவத்தையிட்டு அமெரிக்கத் தலைவர்களும் அரசியல்வாதிகளும் கவலையும் கண்டனமும் தெரிவித்துள்ளனர்.

துப்பாக்கிக் குண்டுகளுக்கு இரையான காலஞ்சென்ற அமெரிக்க ஜனாதிபதி திரு. ஜோன் எவ். கென்னடியின் சகோதரரான அமெரிக்க செனட்டர் திரு. ரொபர்ட் கென்னடி இன்று காலை தலையில் சுடப்பட்டார். இவரது நிலை கவலைக்கிடமானதாக இருப்பதாக ஆஸ்பத்திரிச் செய்திகள் தெரிவிக்கின்றன

(8-ம் பக்கம் பார்க்க)

## ஆள்பதிவு மசோதா நிறைவேறியது

### கம்பஹா, ஊர்காவற்றுறை எம்.பி.க்கள் எதிர்த்து வாக்களித்தனர்

கொழும்பு, புதன்

ஆள்பதிவு [அடையாள அட்டைகள்] மசோதா இன்று மூன்றாவது டவை யாக வாசிக்கப்பட்டு மக்கள் பிரதிநிதிகள்சபையில் நிறைவேற்றப்பட்டது. மசோதாவை எதிர்த்து ஊர்காவற்றுறை எம். பி. திரு. வி. நவரத்தினமும் கம்பஹா எம். பி. யும் [சீனச் சார்பு] கம்யூனிஸ்ட் கட்சிபிரமுகருமான திரு. எஸ். டி. பண்டாரநாயகாவும் வாக்களித்தனர். மசோதாவை ஆதரித்து எதிர்க்கட்சியினர் உட்பட 65 பேர் வாக்களித்தனர்.

## வெள்ளையறிக்கையை பிரதமர் சமர்ப்பித்தார்

சர்ச்சைக்கிடமான மாவட்ட சபை பற்றிய வெள்ளை அறிக்கையையும் அதனுடன் இணைந்த மாவட்டசபை நகல் மசோதாவையும் பிரதமர் திரு. டட்லி சேனநாயகா இன்று பிற்பகல் மக்கள் பிரதிகள் சபைகூடியதும் சபையில் சமர்ப்பித்தார்.

வெள்ளை அறிக்கைமீது எப்பொழுது விவாதம் ஆரம்பமாகும் என தம்பதெனியா எம். பி. திரு. ஆர். ஜி. சேனநாயகா கேட்டபோது இம்மாதம் 8-ம் திகதி விவாதிக்கத் தொடங்கலாம் என பிரதமர் தெரிவித்தார்.

## எதிர்க்கட்சி கூட்டணி பொதுக்கொள்கைச்சாத்து

எதிர்க்கட்சித் தலைவர் திருமதி சிறிமா பண்டாரநாயகா தலைமையில் எதிர்க்கட்சிக் கூட்டுமுன்னணியின் பார்லிமெண்டரிக்குழுக்கூட்டம் இன்றுகாலை ஜனப்பிரதிநிதிகள் சபைக்கட்டிடத்தில் நடைபெற்றது.

மாவட்டசபைகள் பற்றிய வெள்ளையறிக்கை மீது இம்மாதம் 8-ந் திகதி நடைபெறும் விவாதத்தில்கலந்து கொள்ளாமல் அதைப்பகிஷ்கரிப்பதென்றும் அன்றுசபையில் எதிர்க்கட்சித்தலைவர் ஓர் அறிக்கை விட்டபின் வெளிநடப்புச் செய்வதென்றும் அதன்பின்னர் பொதுக்கூட்டமொன்று நடத்துவதென்றும் எதிர்க்கட்சிக்கூட்டணி அங்கத்தவர்களிடமுள்ள வெள்ளையறிக்கைப் பிரதிகளைப்பல இடங்களிலும் பொதுமக்கள் முன்னிலையில் தீவைத்துக் கொளுத்துவதென்றும் எதிர்க்கட்சிக் கூட்டணி பார்லிமெண்டரிக்

[8-ம் பக்கம் பார்க்க]

பேராதனைப்பல்கலைக்கழக

## முருகன் கோயிலில் இன்று மகாகும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம், வியா.

பேராதனை பல்கலைக்கழக முருகன் கோவில் மகாகும்பாபிஷேகம் இன்று காலை 10-45 மணி முதல் 11-20 வரையான சுப நேரத்தில் நடைபெறும். காலை 11-30 மணிக்கு மகாகும்பாபிஷேகமும், மாலை 6 மணிக்கு திருக்கல்யாணமும் நடைபெறும்.

'கலைமகள்' ஆசிரியரும் தமிழ் அறிஞருமான திரு. கி. வா. ஜகந்நாதன், முதற்தடவையாக இலங்கை வந்திருக்கும் பேராசிரியர் திரு. வே. சுப்பிரமணியன் ஆகியோரின் சொற்பொழிவுகளும் இன்று இடம்பெறும்.

பேராதனை பல்கலைக்கழக திருமுருக கீர்த்தனைகளும் மற்றும் பாடல்களும் கொண்ட புத்தகமொன்றை மானிப்பாய் இந்துக் கல்லூரி சைவ மாணவர் சங்கத்தினர் கும்பாபிஷேக வெளியீடாக வெளியிடுவர். இப்பாடல்களை மானிப்பாய் இந்

[8-ம் பக்கம் பார்க்க]



பேராதனைப் பல்கலைக்கழகத்தில் அமைந்துள்ள முருகன் ஆலயத்தில் இன்று மகாகும்பாபிஷேகம் நடைபெறுகிறது [illegible] பிரதிஷ்டை செய்யப்படும் [illegible] தோற்றம் இவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயிருடன் போராடிக் கொண்டிருந்த

# கர்ப்பிணியைக் கொண்டுசெல்ல அம்புலன்ஸ் ஒன்று இல்லை

## வவனியா மாவட்டத்தின் அவலநிலை

முல்லைத்தீவு, புதன்
வேதனையால் துடிதுடித்து உயிருடன் போராடிக் கொண்டிருந்த கர்ப்பிணி ஒருவரை, முல்லைத்தீவு ஆஸ்பத்திரியிலிருந்து யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரிக்கு அவசர சிகிச்சைக்காக உடனடியாகக் கொண்டு செல்வதற்கு வவுனியா மாவட்டத்தில் ஓர் அம்புலன்ஸ் வண்டி இல்லாமற்போன பரிதாபம் நடைபெற்றுள்ளது.

முல்லைத்தீவு ஆஸ்பத்திரிக்குக் கொண்டுசெல்லப்பட்ட இந்தக் கர்ப்பிணி நிலை கவலைக்கிடமானதாக இருக்கவே, யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரிக்கு உடனடியாகக் கொண்டுசெல்வதற்கு வைத்திய அதிகாரிகள் உத்தரவிட்டனராம். வவுனியா ஆஸ்பத்திரிக்கு ஓர் அம்புலன்ஸ்வண்டி அனுப்பிவைக்கும்படி செய்தி பறந்தது. ஆனால் அங்குள்ள ஒரேயொரு அம்புலன்ஸ் வண்டி பழுதடைந்த நிலையிலிருப்பதாகப் பதில் செய்தி வந்தது.

உயிருடன் போராடி வேதனையால் துடிதுடித்துக் கொண்டிருந்த கர்ப்பிணியின் கணவர், ஆஸ்பத்திரி நடவடிக்கைகளை மேலும் பார்த்துக்கொண்டிருக்கப் பொறுமையற்றவராய்வாடகைக் கார் ஒன்று பிடித்துக் கொண்டு யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி போய்ச் சேர்ந்தாராம்.

## ஆங்கிலத்தின் அவசியத்தை வற்புறுத்தினுர் அண்ணு

சென்னை, ஜூன் 5
ஆங்கிலத்தின் அவசியத்தை நேற்று இங்கு நடைபெற்ற ஒரு வைபவம் ஒன்றில் வற்புறுத்திச்சொன்னுர். தமிழக முதலமைச்சர் திரு. சி. என். அண்ணுதுரை.

''மேற்கத்தைய நாடுகளுடன் தொடர்பு கொள்வதற்கு ஆங்கிலம் கட்டாயம் கற்றுக் கொள்ள வேண்டும். வேற்று இலக்கியங்களையும், விஞ்ஞானத்தையும் படித்து முன்னேற ஆங்கிலத்தை ஒவ்வொரு மாணவரும் படித்துக் கொள்ள வேண்டும்'' என்ருர் தமிழக முதலமைச்சர்.

தமிழகத்தில் வெளிநாட்டு உல்லாசப் பிரயாணிகள் தங்கி அனுபவித்துச் செல்வதற்கு ஏற்ற இடங்கள் இருந்தும் அவை பயனுள்ளவகையில் அமைக்கப்படாதது பெருங்குறை என்று கூறிய திரு. அண்ணுதுரை, சென்னை கடற் கரையையும், மற்றும் இயற்கையான அழகைக் கொண்ட சில பகுதிகளையும் நவீன முறையிலாக்க தமிழக அரசு நடவடிக்கை எடுக்குமென உறுதிகூறினுர்.

## குளத்தில் மூழ்கி சிறுவன் மரணம்

ஊர்காவற்றுறை, புதன்
நாயொன்றைக் குளிப்பாட்டச் சென்ற சிறுவன் ஒருவன் [7 வயது] குளத்து நீரில் மூழ்கி மரணமானுன். இச் சம்பவம் வேலணை மேற்கில் நடைபெற்றது.

குளத்தில் நாயைக் குளிப்பாட்டிக் கொண்டிருக்கும் போது நாய் சிறுவனை இழுத்துக் கொண்டு ஆழமான பகுதிக்குச் சென்றதாக விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

நவரத்தினராசா நவராசன் என்றஇச்சிறுவனின் மரணம்பற்றி திடீர் மரண விசாரணை அதிகாரி திரு. மகாலிங்கம் ஸ்தல விசாரணை நடத்தினுர். பிரஸ்தாப சிறுவனுடன் குளத்திற்குச் சென்ற நவஜீவன் எட்டுவயதுச் சிறுவன் (இவரது சகோதரன்) சாட்சியமளித்தான்.

விபத்தினுல் ஏற்பட்ட மரணம் எனத் தீர்ப்பளிக்கப்பட்டது.

## வருடாந்த கூட்டம்

யாழ்ப்பாணம், புதன்
இலங்கை சுருட்டு தொழிலாளர் சங்கத்தின் பொதுச் சபையின் வருடாந்த கூட்டம் சங்க காரியாலயத்தில் நடைபெற்றது. பின்வருவோர் புதுவருட உத்தியோகத்தர்களாக தெரிவு செய்யப்பட்டனர். தலைவர்:- திரு. க. சோமஸ்கந்தன், உபதலைவர்கள்:- திருவாளர்கள் வி. ஆறுமுகம், க. அ. பரராசசிங்கம், காரியதரிசி திரு சி. முதலியார், உபகாரியதரிசி திரு எம். தியாகராஜா. தனதிகாரி திரு. க. விஸ்வலிங்கம்.

## தெளிவு இல்லாததால் குழப்பம்

வெள்ளவத்தை, புதன்
சமீபத்தில் நடைபெற்ற தொழில்நுட்பக் கல்லூரிகளின் புதுமுகப் பரீட்சைக்கு கொழும்பில் தோற்றிய பரீட்சார்த்திகளில் சிலர் ஆங்கிலத்தில் தாம் படிக்கவிரும்பும் பயிற்சி நெறிகளுக்கான பிரவேசப் பாடத்தைத் தமிழ் மொழியிலும் எழுதியுள்ளனர். அதாவது இவர்கள் ஆங்கிலத்திற் கட்டுரை எழுத வேண்டியதற்குப் பதிலாக தமிழில் எழுதியுள்ளனர். இதனுல் தங்களது தமைமைகள் நிராகரிக்கப்படலாம் என அச்சங்கொண்டுள்ள இப் பரீட்சார்த்திகள் இப்போது தம்மை கொக்குவில் யாழ். கனிஷ்ட தொழில்நுட்பக் கல்லூரிக்கு அனுப்பும்படி கோரவிருக்கின்றனராம். அங்கே இவர்கள் தமது பயிற்சி நெறிகளைத் தமிழிலும் பயிலலாம்.

ஆரம்பத்திலேயே இவ்விதிகள் நன்கு தெளிவாக்கப்படவில்லை என்று இவர்கள் கல்விப்பகுதியைக் குறை கூறியுள்ளனர்.

## இலவச உணவு

வவனியா, புதன்
வவனியா அரசினர் ஆஸ்பத்திரி நோயாளிகளுக்கு இலவச உணவு வழங்குவதற்காக பெரியதம்பனை கிராமமுன்னேற்ற சங்கம் மக்களிடம் 120 சேர் அரிசியை சேகரித்து வழங்கியுள்ளது. கலனி அதிபர் திரு எஸ். ஆர். பத்மநாதன் அரிசியை கையளித்தார்.

## சோஷலிசத்தை ஏற்படுத்த வேண்டும்

புதுடில்லி, ஜூன் 5
தேசிய ஒருமைப்பாட்டையும், சோஷலிசத்தையும் நாட்டில் ஏற்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென செயற்குழுவைக் கேட்டுக் கொள்ளும் தீர்மானம் இங்கு நடைபெற்ற அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது. நேற்றுடன் முடிவடைந்த இக் கமிட்டிக் கூட்டத்தில் லோக்சபா, ராஜ்யசபா கூட்டங்களை தனித்தனி நடாத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்வதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

காணி:
12 1/2 பரப்புபனைக்காணி விற்பனவுக்கு கோண்டாவில் கிழக்கில் இருக்கின்றது. விபரங்கட்குதொடர்புகொள்ளவும். விலாசம்: திருமதி தியாகராசா அன்னம்மா, கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில். 1335

காணி:
வாழைபயிரும் கிணற்றுப் பங்குமாக உள்ள 4 பரப்பு சதுரக்காணியில் கிழக்குப் பக்கமாக விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு பிறக்டர் தனபாலசிங்கத்திடம்தொடர்பு கொள்ளவும். விலாசம்: 140/3, கந்தர்மடம், கந்த புராணவீதி, யாழ்ப்பாணம். 1347

காணி:
திருநெல்வேலி ஆடியபாதம் வீதியில் கேணியடி வாசிகசாலைக்குஎதிரேயுள்ள ஒழுங்கையில் இரண்டு வீடுகள் கட்டக்கூடிய ஆறு பரப்புக் காணி விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு:- சோமசுந்தரம், 'கார்மனி', அரசடி ஒழுங்கை, திருநெல்வேலி கிழக்கு. 1348

வான்:
நல்லநிலைமையில்உள்ள CV மொடல் மோட் வான்விற்பனைக்கு: எஞ்சின் வேலை செய்யப்பட்டுள்ளது. ரயர்களும் றேடியேற்ரரும் புதிது. யாழ்ப்பாணம் பெரியதபாற்கந்தோருக்கு அருகாமையில் பார்வையிடலாம். 1345

வியாபாரஸ்தாபனம்:
யாழ் நகரில்புதிதாக ஆரம்பிக்கப்பட்ட வியாபாரஸ்தாபனமொன்று விற்பனைக்கு அல்லது கொமிஷனுக்குக் கொடுக்கப்படவிருக்கிறது. விளம்பர இல 1343 C/o ஈழநாடு, சிவன்கோவில் மேலை வீதி, யாழ்ப்பாணம். 1343

### தேவை

100 வருடங்களுக்கு மேலாக உலகப்பிரசித்தி பெற்ற 'ஒஸ்ரோடீசல்' உழவு இயந்திர நிறுவனத்தில் கடமையாற்றுவதற்கு மேற்பார் வையாளர்கள், கிளை மனேஜர்கள், காசாளர்கள், லிகிதர்கள், தொழில் நுட்ப பயிற்சியாளர்கள் போன்ற பதவிகளுக்கு வடக்கு, கிழக்கு மாகாணங்களிலிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. ரெசக்கப்பிணைகட்டக்கூடியஆண்களும் பெண்களும் விண்ணப்பிக்கலாம். நிரந்தர வேலைவாய்ப்பும், நல்ல முன்னேற்றமும் உண்டு. வடமாகாண விண்ணப்பங்களை, ''TAS'', கொக்குவில் கிழக்கு, கொக்குவில் என்னும் விலாசத்திற்கும், கிழக்கு மாகாண விண்ணப்பங்களை ''TAS'', நாவற்குடா, காத்தான்குடி என்னும் விலாசத்திற்கும் விண்ணப்பிக்கவும். 1338

இளைஞர்கள்:
காரைநகரில் பேப்பர் விநியோகம் செய்வதற்கு சைக்கிள் ஓடத்தெரிந்த இளைஞர்கள் தேவை. நேரில் வரவும். ஆ. ச. சங்கரப்பிள்ளை அன் பிறதர்ஸ், யாலா வோடை, காரைநகர். 1346


ராணி
(யாழ்ப்பாணம்)
ஜெய்சங்கர், பாரதி, சோ
நடித்த
நான் யார் தெரியுமா?

ராஜா
(யாழ்ப்பாணம்)
தினசரி 2-30, 6-30, 9-30
போயா தினங்களில் 4 காட்சி
ஜெய்சங்கர்
கே. ஆர். விஜயா
முத்துராமன் நாகேஷ்
நடிக்கும்
முகூர்த்தநாள்


வின்ஸர்
எம். ஜி. ஆர்.
பானுமதி - பத்மினி
நடித்த
மதுரை வீரன்
[புதிய கொப்பி]

REGAL JAFFNA
Daily at
4-45, 7-00 & 9-45 P M.
Scott Brady & Virgnia
in
CASTLE OF EVIL
(Adults only)

MANOHARA
JAFFNA
Daily: 4-45, 7-00 & 9-45 P.M.
SEX AND THE SINGLE GIRL

சென்னையில் 100 நாட்களுக்கு ஓடிய சிறந்த வள்ளுவ காவியம்!
கெப்பிட்டல்
(கொழும்பு)
2-00, 6-00, 9-30
வெலிங்டன்
(யாழ்ப்பாணம்)
2-30, 6-30, 9-30
'அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார் என்பும் உரியர் பிறர்க்கு' — இதற்கு நீங்களே சொல்லப்போகும் பதில்

மக்கள் திலகம்
எம். ஜி. ராமச்சந்திரன்
சரோஜாதேவி
எம். ஆர். ராதா
சௌகார் ஜானகி
பேபிஷகிலா
தங்கவேலு
நடித்த
ஸ்ரீ முத்துக்குமரன் பிக்சர்ஸ் அளிக்கும்



பெற்ருல்தான் பிள்ளையா?
டைரக்ஷன்: கிருஷ்ணன்-பஞ்சு


## சங்கீதக்கச்சேரி

கும்பழாவளைப் பிள்ளையார் கோவில், அளவெட்டி
8-ந் திருவிழா 7-6-68 வெள்ளிக்கிழமை இரவு 10 மணி தொடக்கம்.

திருவாங்கூர் ஆஸ்தான வித்துவானும் யாழ்ப்பாணம் இராமநாதன் இசைக்கல்லூரி அதிபரும், தமிழ்நாடு கர்னாடக இசைக்கல்லூரிப் பேராசிரியருமாகிய.

ஸ்ரீ M. A. கல்யாணகிருஷ்ண பாகவதர் — பாட்டு
ஸ்ரீ சோமாஸ்கந்தசர்மா — வயலின்
ஸ்ரீ A. S. இராமநாதன் — மிருதங்கம்
ஸ்ரீ கணேசன் — கஞ்சிரா

815 உபயகாரர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யுத்தப்பேரிகை முழங்கியது! தொடர்ந்து....

# இஸ்ரேல் விமானம் நான்கை ஜோர்டான்சுட்டு வீழ்த்தியது

## முதலாண்டு யுத்த நினைவு தினத்தில் நடந்த கடும்சண்டை

அம்மான், ஜூன். 5

**இஸ்ரேல்-ஜோர்டான் பகுதியில் நேற்று யுத்தப்பேரிகை முழங்கியது! ஓராண்டு காலத்துக்கு முன்னர் நடந்த யுத்தத்தின் முதலாவது நினைவை இரு பகுதியினரும் கொண்டாடிய போது இஸ்ரேலிய போர் விமானங்கள் நான்கு சுட்டுவீழ்த்தப்பட்டன.**

நேற்று விடிவதற்கு முன்னரே விமான உறுமல்களுடனும், பீரங்கி வெடிகளுடனும் ஆரம்பமான இந்தக் கடும்மோதல், மாலைவரை நீடித்ததாக அம்மான் வானொலி அறிவித்தது.

பன்னிரண்டு மணி நேரத்துக்கு மேலாக நீடித்த இந்தச் சண்டையில் 3 ஜோர்தானிய போர்வீரர் உட்பட 35 ஜோர்டானியர் கொல்லப்பட்டதாகவும், 55 பேர் படுகாயமுற்றதாகவும் தெரிவிக்கப்பட்டது. இஸ்ரேலிய தரப்பில் 45 பேர் கொல்லப்பட்டதாகவும், பலர் உயிருடன் போராடிக்கொண்டிருப்பதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

ஜோர்டான் வடக்குப் பகுதியில் இஸ்ரேலிய குண்டு விமானங்கள் கடுமையான தாக்குதல் நடாத்திய போதும், ஜோர்டான் ஈடுகொடுத்து அவைகளை சமாளித்ததாகவும் அம்மான் வானொலி கூறியது.

### ஜோர்டானின் கடுமையான தாக்குதல்

நேற்று இருபகுதியினருக்குமிடையில் நடைபெற்ற கடும் சண்டையில் ஜோர்டானிய துருப்புகள் இஸ்ரேலிய தரப்பை கடுமையாகத் தாக்கிக் கூடுதலான சேதம் விளைவித்ததாக செய்திகள் கூறுகின்றன.

ஆயினும் ஜோர்டான் பகுதிக்கே பலத்த சேதத்தை விளைவித்து விட்டதாக இஸ்ரேலிய தரப்பு அறிவித்தது. கூடுதலான உயிர்ச்சேதமும் ஜோர்டான் தரப்புக்கே ஏற்பட்டதென இஸ்ரேலிய தரப்புக் கூறியது.

இருபகுதியினருக்குமிடையில் நடந்த நீண்டநேர கடும்சண்டைக்குப்பின் இப்போது இருபகுதியிலும் அமைதி நிலவுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

## சபாநாயகரின் பயிற்சி முடிந்தது

லண்டன், ஜூன் 5

இலங்கை ஜனப்பிரதிநிதிகள் சபையின் சபாநாயகர் திரு. ஷேர்லி கொரியா லண்டனில் தமது பயிற்சி வகுப்புகளை முடித்துக்கொண்டார். சாம்ராஜ்ய பாராளுமன்றச்சங்கம் ஒழுங்குசெய்துள்ள பாராளுமன்ற நடைமுறை சம்பந்தமான இப் பயிற்சி வகுப்புகளில் இலங்கைப் பிரதிநிதியாக திரு. கொரியா பங்குபற்றினார். 22 சாம்ராஜ்ய நாடுகளைச் சேர்ந்த பிரதிநிதிகள் இப்பயிற்சியில் பங்குபற்றினார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தப் பயிற்சி வகுப்புகள் மே மாதம் 1ந் திகதி ஆரம்பமாகின. பிரிட்டிஷ் மக்கள் சபை சபாநாயகர் டாக்டர் ஹொராஸ் கிங் இந்தப் பயிற்சி வகுப்புகளை ஆரம்பித்துவைத்தார். பிரபல பிரிட்டிஷ் அரசியல்வாதிகள் பலர் இந்தப் பயிற்சிவகுப்புகளின்போது பாராளுமன்ற நடைமுறை பற்றிச் சொற்பொழிவுகளை நிகழ்த்தினார்கள்.

வெஸ்ட் மினிஸ்டரிலுள்ள பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில் நடைபெற்ற விவாதங்களில் இவர்கள் பங்குபற்றியதுடன் பிரிட்டிஷ் பாராளுமன்ற அங்கத்தவர்களையும் சந்தித்துச் சம்பாஷணைகள் நடத்தினர்.

## சைகோன் நகரைச் சுற்றி பீரங்கித்தாக்குதல்

லண்டன், ஜூன் 5

சைகோன் நகரைச் சுற்றி நேற்று மிகக்கடுமையான பீரங்கித் தாக்குதல்கள் நடைபெற்றன.

வியட்காங் துருப்புகளுக்கும் அமெரிக்கத் துருப்புகளுக்குமிடையில் கடுமையான மோதல் நடந்தது. சில நகரங்கள் முற்றாகச் சேதமடைந்துவிட்டதாகச் செய்திகள் தெரிவித்தன.

சைகோன் நகருக்குமேற்குப் பகுதியில் புதிய சண்டைகள் நடைபெற்றதாகவும் 4 இடங்களில் கடும் சமர் நடைபெற்றதாகவும் அறிவிக்கப்பட்டது.

## 'முற்றாக நிபந்தனையற்று குண்டு வீச்சை நிறுத்துக'

### பழைய நிலையை ஹனோய் மீண்டும் வற்புறுத்துகிறது

ஹனோய், ஜூன் 5

"வடவியட்னாம் மீதான குண்டுவீச்சை அமெரிக்கா நிபந்தனையற்று முற்றாக நிறுத்தவேண்டும். அப்போதுதான் வியட்னாம் சமாதானத்துக்கான நடவடிக்கைகள் ஈடுபட முடியும்" என்று நேற்று ஹனோய் மீண்டும் தனது பழைய நிலையை வற்புறுத்தியுள்ளது.

வட வியட்னாம் பேச்சுவார்த்தைகளில் ஸ்தம்பித நிலையிலுள்ளதாகச் சாட்டப்படும் அமெரிக்காவின் குற்றச்சாட்டுக்களை மறுத்த ஹனோய், குண்டு வீச்சை நிபந்தனையற்ற முறையில் பூரணமாக நிறுத்தினால் சமாதானத்துக்கு வடவியட்னாம் தயாராக இருப்பதாக ஹனோல் அறிவித்தது.

### பாரிஸ் பேச்சுகள்

அமெரிக்காவுக்கும் வடவியட்னாமுக்குமிடையிலான சமாதானப் பூர்வாங்கப் பேச்சுகள் இன்று இங்கு மீண்டும் ஆரம்பமாகின்றன.

இதுவரை 6 முழு அளவிலான பேச்சுகள் இரு பகுதியினரிடையேயும் நடைபெற்றுள்ளன.

## கொஸிஜினை சந்தித்தார்

மாஸ்கோ, ஜூன் 5

ஆப்கானிஸ்தான மன்னர் மொஹமட் ஸாகிர் ஷா கிரெம்ளினில் சோவியத் யூனியன் சுப்ரீம் சோவியத் முதல்வர் நிக்கொலாய் பொட்கர்னியைச் சந்தித்தார்.

நிக்கொலாய் பொட்கர்னியும், மொஹமட் ஸாகிர் ஷாவும் நேசபூர்வமான சம்பாஷணையை நிகழ்த்தினர் என இங்கு அறிவிக்கப்பட்டது.

பின்னர். இன்று கிரெம்ளினில் சோவியத் அமைச்சரவைத் தலைவர் அலெக்ஸி கொஸிஜினையும் மன்னர் ஷா சந்தித்தார்.

நேசபூர்வமாய் நிகழ்ந்த சம்பாஷணையின் போது அவர்கள் சோவியத்-ஆப்கானிஸ்தான் உறவுகள் குறித்தும், சில முக்கிய சர்வதேசப் பிரச்னைகள் குறித்தும் ஆராய்ந்தனர். இப்பேச்சுவார்த்தைகளில் சோவியத் அயல்நாட்டமைச்சர் அந்திரி குரோமிகோவும் இதர அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

## மாஸ்கோவில் ஈராக் மந்திரி

மாஸ்கோ, ஜூன் 5

ஈராக் தொழில்துறை அமைச்சர் ஹாலிஸ் இப்ராஹிம், இன்று வெளிநாட்டு வர்த்தக உறவுகள் கமிட்டியின் தலைவர் செமியோனோவ் ஸ்கச்கோவைச் சந்தித்து ஈராக்-சோவியத் ஒத்துழைப்பை மேலும் விரிவுபடுத்துவது குறித்து விவாதித்தார்.

பொருளாதார, தொழில்நுட்ப உடன்படிக்கைகளை நிறைவேற்றுவது பற்றியும் இவர்கள் ஆலோசித்தனர்.

இந்த உடன்படிக்கைகளின்பிரகாரம் மேற்கொள்ளப்பட்ட பல முக்கியமான நிர்மாணத் திட்டங்கள் வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டுவருகின்றன என்று ஹாலிஸ் இப்ராஹிம் சொன்னார். ஸ்கச்கோவ் ஈராக்கில் இருந்தபோது கடந்த மார்கழி மாதத்தில் செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கைகளின் பிரகாரம் இந்த நிர்மாண நிலையங்கள் இயங்க ஆரம்பிப்பதை விரிவுபடுத்த ஈராக் தரப்பு ஒப்புக்கொண்டது.

மே 30ந் திகதியிலிருந்து ஈராக் அமைச்சர் சோவியத் யூனியனில் தங்கியுள்ளார். இன்று இவர் லெனின்கிராட்டுக்குப் பிரயாணமாயிருப்பர்.

## 'பொதுநல சேவையாளன் யார்?

சாவகச்சேரி, புதன்

தனதுசொந்தவிட்டுவேலைகளிலும் பார்க்க அதிக அக்கறையுடன் பொதுநலசேவைகளில் எவன் ஒருவன் ஈடுபடுகிறானோ அவன்தான் சிறந்த பொதுநல சேவையாவன்,'

மேற்கண்டவாறு நுணாவில் மட்டுவில் இளைஞர் முன்னேற்றச் சங்கத்தினரும் மட்டுவில் தெற்குசரஸ்வதி வித்தியாசாலை பழைய மாணவர்களும் கூட்டுச் சேர்ந்து நுணாவில் குச்சப்பிட்டி மகாவத்திற்குச்செல்லும் சுமார் முக்காலிமைல் நீளமுள்ள வீதியை சிரமதானமூலம் சீர் திருத்தி அமைக்கும் சேவையை ஆரம்பித்து வைத்த மட்டு தெற்கு சரஸ்வதி வித்தியசாலை தலைமை ஆசிரியர் திரு ச, மகாலிங்கம் கூறினார்.

மேலும் திரு ஏ, பீ. செல்லையா கிராமசேவையாளர் திரு இரத்தினராஜா, திரு. கல்வயல் அருள்வேலழகன் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு ஏ. ஜெயரத்தினம் ஆகியோரும் பல பிரமுகர்களும் கலந்து கொண்டனர்.

## சார்ஜண்டின் கடமை உணர்ச்சி

### இரு சிறுவர் கைது

யாழ்ப்பாணம், வியா.

களவாடிய பொருட்களுடன் பஸ் நிலையத்தில் நின்றதாக இரு சிறுவர்களைச் சாதாரண உடையில் நின்ற பொலிஸ் சார்ஜன்ட் ஒருவர் கைதுசெய்தார். இச் சம்பவம் யாழ்ப்பாணம் பஸ் நிலையத்தில் நடைபெற்றது.

கொழும்பு கோட்டைப் பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸ் சார்ஜண்ட் சப்பிரமாது என்பவரே இரு சிறுவர்களையும் கைது செய்தார். நுணாவிலுள்ள வீடொன்றில் களவாடிய சுமார் 500 ரூபா பெறுமதியான பொருட்களுடன் இவர்கள் நின்றபோது கைதுசெய்யப்பட்டதாக பொலிசில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கைதுசெய்யப்பட்ட பிரேம் குமார், செல்வரத்தினம் ஆகிய இரு சிறுவரும் பொலிஸ் பாதுகாப்பில் வைக்கப்பட்டனர்.

(கா. நி.)

## 'வாக்குறுதியை நிறைவேற்றுக'

சுழிபுரம், புதன்

யாழ்ப்பாணத்தில் புற்றுநோயாளர் சிகிச்சை நிலையத்தைத் திறப்பதாக முன்னர் அளித்த வாக்குறுதியை உடனே நிறைவேற்றுமாறும் தக்க சிகிச்சை நிலையம் இல்லாததால் சிலர் அகாலமையில் இறக்க நேரிட்டதென்றும் குறிப்பிட்ட கடிதமொன்றை யாழ். மாவட்ட புற்றுநோய் சங்க இணைச் செயலாளர்களில் ஒருவரான திரு த துரைசிங்கம் சுகாதார அமைச்சுக்கு அனுப்பி வைத்துள்ளார்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

உண்மை அன்பு கொள்ளுங்கள். இதன் மூலம் மக்களுக்கு உண்மையான சேவை செய்யலாம். தீமை உணர்வுகளிலிருந்து விடுபட நல்ல நினைவுகளை வளர்க்குவியுங்கள். சக்திகளை நல்வழியில் செலவிடுங்கள். எந்நேரமும் உற்சாகத்துடனும் மகிழ்ச்சியுடனும் இருங்கள்.

— சுவாமி சிவானந்தா


# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: EELANAD Jaffna
Post Box 49 Jaffna
Telephone 389

கீலக வருஷம் வைகாசி மாதம் 24-ந் திகதி
(6-6-68)


## பேராதனை முருகன்

பேராதனைப் பல்கலைக்கழக இந்து மாணவர் மன்றத்தினரின் பெரு முயற்சியால் எழுந்துள்ள முருகன் ஆலயத்தில் இன்று மகாகும்பாபிஷேகம் நடைபெறுகிறது. குன்றிலாடும் குமரனுக்கு மலையகத்தின் திலகமாக விளங்கும் கண்டியை அடுத்த பேராதனையில், பல்கலையிலும் பல்கலைக்கழகத்தில் கோயில் எடுத்திருப்பது மிகப்பொருத்தம் மட்டுமல்ல. 'மேன்மை கொள் சைவ நீதி விளங்கும்' உலகம் முழுவதற்கும் பெருமை தருவதுமாகும்.

வேண்டுவார் வேண்டுவதை ஈந்தருளும் கந்தவேள் தந்தைக்கே உபதேசம் செய்தவன். கண்டியில் கலையிலும் இந்துமாணவர்களுக்கு மட்டுமல்லாது அனைவருக்கும் அருள்புரிவான் என்பது திண்ணம்.

நற்பிரஜைகள் உருவாவதற்கு மாணவர்களுக்கு சிறுவயதிலேயே சமயக்கல்வியும் ஊட்டப்பட வேண்டுமென்பது எந்நாட்டறிஞர்களும் ஒப்புக்கொண்ட கருத்து. சமயக்கல்வி வெறும் போதனையாக இருந்தால் மட்டும்போதாது. இது சமய அறிவைத்தான் வளர்க்கும்; சமய அறிவுடன் சமய உணர்வும் வேண்டும். சமய உணர்வுக்கு சாதனை தேவை. இன்று மகாகும்பாபிஷேகம் நடைபெறும் முருகன் கோயில் பல்கலைக்கழக மாணவர்களுக்கு இருந்து வந்த நீண்டகாலக் குறையை நிவர்த்திசெய்கின்றது. இந்தப்பெரும் பணியில் முன்னின்று உழைத்த மாணவர்களையும் பேராசிரியர்களையும் மற்றும் பல வழிகளிலும் இத்திருப்பணிக்கு உதவியும் உத்துழைப்புமளித்தவர்களையும் சைவ உலகம் என்றும் மறக்காது.

## பகிஷ்கரிப்பு தீர்மானம்

மாவட்டசபைபற்றிய வெள்ளையறிக்கைமீது மக்கள் பிரதிநிதிகள் சபையில் நாளை மறுதினம் ஆரம்பமாகும் விவாதத்தில்கலந்து கொள்வதில்லையென்றும் விவாதத்தைப் பகிஷ்கரித்து வெளிநடப்புச் செய்வதென்றும் திருமதி சிறிமா பண்டாரநாயகாவின் தலைமையிலுள்ள ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சியின் பார்லிமெண்டரிக்குழு தீர்மானித்திருக்கிறது. 'நாட்டுக்கே பாதகமானது மாவட்டசபைகள்' என்று கூறுவோர் தங்கள் கருத்தை பொது மேடைகளிலும் பத்திரிகைகளிலும் வெளியிடுவதைவிட பார்லிமெண்ட் தான் மிகப் பொருத்தமான இடமென்பதை உணரவில்லையா?

மாவட்டசபைகள் மசோதாவை அவசர அவசரமாகக் கொண்டுவரக்கூடாதென்றும் மாவட்டசபைகளின் அமைப்பு, அதிகாரங்கள் பற்றிய விபரங்களைப் பொதுமக்கள் முன் வைக்க வேண்டுமென்றும் அதன்பின்னரே மாவட்டசபை மசோதா கொண்டுவரவேண்டுமென்றும் கூறியவர்கள், மாவட்டசபை பற்றிய விபரங்கள் வெள்ளை அறிக்கையாக நகல் மசோதாவுடன் வெளிவந்திருக்கும்போது அதை சாதக பாதகங்களைப்பற்றி சபையில் எடுத்துக் கூறுவதுதான் அவர்களின் கடமை. விவாதத்தில் கலந்து கொள்வதும் கலந்து கொள்ளாததும் அவர்களுக்குள்ள உரிமை. ஆனால் சொல்லவேண்டியதைச் சொல்லவேண்டிய இடத்தில் சொல்லத் தவறுவது அவர்கள் பக்கம் நியாயமிருப்பினும் மக்கள் மத்தியில் தவறான அபிப்பிராயத்தை ஏற்படுத்தக்கூடும்.

மாவட்டசபைகள் யாருக்கு நன்மை, யாருக்குத் தீமை என்பதல்ல. தேசிய ஐக்கியத்தைமாவட்டசபைகள் சீர்குலைத்து விடுமெனக் கூறுவோர், நாட்டுக்கு நன்மையா, தீமையா என்பதை விவாதிக்கவும் ஆராயவும் கிடைக்கும் சந்தர்ப்பத்தை ஏன் பயன்படுத்தக் கூடாது?

ஜனநாயக அமைப்பில் ஆளும் கட்சியினரை விட எதிர்க்கட்சியினரின் பொறுப்பும் கடமையும் அதிகமுண்டு. இவற்றை உணர்ந்துகொண்டு மாவட்டசபை விவாதத்தில் கலந்துகொள்வதற்கு எதிர்க்கட்சியினருக்கு இன்னும் காலம் கடந்து விடவில்லை.

விவாதத்தை பகிஷ்கரிப்பதென்றும் வெள்ளையறிக்கையின் பிரதியொன்றை தீவைத்துக் கொளுத்துவதென்றும் சுதந்திரக்கட்சியினர் செய்துள்ள தீர்மானம் அடுத்த தேர்தலுக்கு உபயோகப்படலாம்; அரசியல் இலாபமும் கிடைக்கலாம். ஆனால் நாட்டுக்கும் நாட்டின் அமைதிக்கும் இந்த முடிவு எந்த விதத்திலும் உதவிசெய்யாது.

'வெந்த வீட்டில் பிடுங்கியது ஆதாயம்' என்ற மனப்பான்மை கொண்ட சமூகத் துரோகிகளும், குண்டர்களும் எந்தச் சூழ்நிலையையும் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ளக் காத்திருக்கும் போது, அதற்கு இடம் கொடுக்கும் முறையில் நடந்து கொள்வது நாட்டுக்கு நல்லதல்ல. தனி மனிதனின் நலனைவிட குடும்பத்தின் நலன் பெரிது. குடும்பத்தின் நலனைவிட கிராமத்தின் நலனைவிட சமூகத்தின் நலன் பெரிது. சமூகத்தின் நலனைவிட தேசத்தின் நலனைவிட உலகத்தின் நலன் பெரிது என்ற உணர்வு எப்போதான் நம் நாட்டுத் தலைவர்களுக்கும் மக்களுக்கும் ஏற்படுமோ?

## இணுவில் ஆலய உற்சவம்

இணுவில், புதன்

இணுவில் அம்பலவாண கந்தசுவாமி கோவில் ஆலய உற்சவம் இம்மாதம் முதல் திகதி தொடக்கம் நடைபெற்று வருகிறது. 25 நாட்களுக்கு உற்சவம் நடைபெறும்.

# குன்றமாந்துறையக் குமரவேள்வரு

குறிஞ்சி நிலமாய பேராதனைப் பதியில் பல்கலை பயிலும் பல்லாயிரவர் செய்த தவத்தின் பயனாய் அவர்தம் மத்தியில் உறைந்து அவர்க்கும் பிறர்க்கும் பேரருள் செய்யக் குன்றம் எறிந்த குமரவேள் கோயில் கொண்டெழுந்தருளி யுள்ளார். அவர் மாவலி ஏக்கர் மணலும் உலாவுவர். வண்டுகள் அலவாப் பேராதனைப்பொழிலிலும்உலாவுவர், மெய்யடியார் உளத்திலும் உலவுவர். அவர் தம் வழிபாட்டை ஏற்றருள் புரிவதற்குப் பேராதனைப் பதியில் வள்ளி தெய்வயானை சமேதராய் எழுந்தருளியும் இருப்பர்.

அழகுத் தெய்வமாய மாரனுடைய அழகைவெருறைப்பவன் குமாரன். மாரன்—மன்மதன். கு—குறைப்பவன். கோடிக்கணக்கான மன்மதர்களுடைய அழகுகள் எல்லாம் ஒன்றுய்த்திரண்டு உருப்பெற்றாலும் முருகப்பெருமான் திருவடி எழிலுக்காற்ருது எனப் பகைவனான பதுமனே பகர்கின்றான். குமாரன் என்பதற்கு அஞ்ஞானத்தை ஒழிப்பவன் என்றும்பொருள் உண்டு. கு-அஞ்ஞானத்தை, மார—ஒழிப்பவன்.

ஆயிரகோடி காமர்
அழகெலாம்
திரண்டொன் ருகி
மேயின எனினும் செவ்வேள்
விமலமாம் சரணம் தன்னில்
தூயநல் எழிலுக் காற்ரு
தென்றிடின் இனைய
தொல்லோன்
மாயிரு வடிவிற் கெல்லாம்
உவமையார் வருக்க
வல்லார்.

முருகக்கடவுள் தம்மை மெய்யன்போடு வழிபடுமடியார்களுக்கு அன்பருளீந்து, தத்துவஞானத்தை நிலைப்பித்து, சேரற்குகிட்டாத திருவடிப் பெருவாழ்வையும் கொடுத்தருளுவர். அப்பெருமானுடைய பிரபாவங்கள் மனவாக்குகட்கெட்டாதன. அவற்றின் ஒரு சிறிதே ஆன்மாக்கள் உய்யும் பொருட்டு வேதங்கள், சிவாகமங்கள், புராணங்கள் இதிகாசங்கள் முதலிய ஞானநூல்களிற் கூறப்பட்டவை. தமிழர் தம் பண்டை நூல்களில் முருகப் பெருமானே கடவுள் எனக் கூறப்பட்டுள்ளது.

தமிழருக்கே உரிய ஐந்திணைகளுள் முதற்றிணையாய கூடலின்பந்தருஞ்சிறப்பினையுடைய குறிஞ்சிநிலத்துக்கு அதிதெய்வம் முருகனே என்று முற்றுணர் புலவராய அகத்தியர், தொல்காப்பியர் முதலானோர் கூறலால் தமிழ் நாட்டுத் தெய்வம் அவரே என்பது தெளிவாம். அவரே செந்தமிழ்ப் பரமாசாரியர் என்பர். முழுமுதற் கடவுளாய சிவபெருமான் தாமே முருகன் என்றும் முருகனே தாம்என்றும் அருளிச்செய்துள்ளார்.

ஆதலின் நமது சக்தி
அறுமுகன் அவனும் யாமும்
பேதகம் அன்றால்
நம்போல் பிரிவிலன்
யாண்டும் நின்றான்
ஏதமில் குழவி போல்வான்
யாவையும் உணர்ந்தான்
சீரும்
போதமும் அழிவில்
வீடும் போற்றினர்க்கு
அருள் வல்லான்.

சிவபெருமானே முருகக்கடவுளாக எழுந்தருளினார் என்பது.

மறைகளின் முடிவால்
வாக்கால் மனத்தினால்
அளக்கொணாமல்
நிறைவுடன் யாண்டு மாகி
நின்றிடும் நிமலமூர்த்தி
அறுமுக உருவாய்த்
தோன்றி அருளொடு
சரணத்தில்
வெறிகமழ் கமலப் போதில்
வீற்றிருந் தருளினானே.

என்னுங் கந்தபுராணச்செய்யுளால் அறியக்கிடக்கிறது.

இறைவன் என்றுமுள்ளவன் எங்கும் நிறைந்தவன் எல்லாம் அறிவன் எல்லாம் வல்லவன். அவன் எங்கும் உள்ளவன் என்பது கிழக்கு, மேற்கு, வடக்கு, தெற்கு ஆகிய பெருந்திக்குகள் நான்கையும் அவற்றுடன் மேல் கீழ் ஆகிய இடங்களையும் நிறைத்து நிற்பவன் என்பதாம். அவனுடைய நான்கு முகங்கள் போலன்றி அரனுக்கு ஐந்து முகங்கள் உண்டு. அந்த ஐந்துமுகங்களோடு முருகனுக்கு அதோமுகமாய ஆறுவது முகமும் உண்டு. அம்முகஞ்சேர அவர் சண்முகமாயினார். அம்முகம் ஞானமயமாவது. ஞானிகளால் நோக்கப்படுவது.

ஆற்றல் நிறைந்த இடத்திலே தான் அருளும் உள்ளது. சிவபெருமானுடைய ஆற்றல் எனத்தகும் அறுமுகன் அருளொடு, அருளினால் தோன்றினான் என்பர் கச்சியப்பசிவாசாரியசுவாமிகள். அப்பெருமானை மனத்தினாலும் வாக்கினாலும் அளக்கமுடியாது. ஞானந்தானுருவாய நாயகன் இயல்பை மோனந் தீர்களா முனிவரும் முழுதுந் தேறலர். அவன் அருளாளன், கருணை கூர் முகங்களாறுங் கொண்டவன். அவன் உலகம் உய்ய உவப்ப உதித்தவன். மெய்யடியார்களுக்கு பகைவராலும் பிணியாலும் அஞ்சுமுகந்தோன்றில் அவர்களுக்கு அருள்செய்யும் ஆறுமுகந்தோன்றும் என்பர் முருகபக்தர்.


முருகக்கடவுள் வேலொடு தோன்றுபவர். அவ்வேல் பகைமையை, இருளை, அஞ்ஞானத்தைஓட்டுவது, ஞானமயமாவது, ஞானசக்தி எனப்படுவது. முருகன் வேலேந்திய நாதன் எனப் போற்றப் படுவார். "சக்திபாணிநம" என்பது முருக உபாசனை மந்திரங்களுள் முக்கியமானது. "சத்தி கைத்தலம் நித்தம் பெற்றுக் கச்சியில் நிற்கும் பெருமாளே" என அருணகிரிநாதர் அருளிச்செய்துள்ளார்.

சூரன் இருளுருவங் கொண்டு மண்ணும் விண்ணும் இருள்பட நின்ற போது இந்திராதி தேவர்கள் இடர்பட்டு முருகப் பெருமானை இரந்து வேண்டியபோது அவர் இருதலை படைத்த தம் வேற்படையை உடனே ஏவினார். சனது நெற்றிக்கண்ணில் எழுந்த நெருப்பிலே உருவாக்கி அப்பெருமான் இடக் கையிலே தாங்கிய நெருப்பிலே தோய்க்கப் பெற்றது போன்ற அவ் வேற்படை சூரனைத் தாக்கியபின் அவன் உருவத்தைவிட்டு அருள் உருவங்கொண்டு மீண்டும் முருகப்பெருமானது செங்கையில் வந்து அமர்ந்தது.

தீமைகள் செய்தவரும் முருகப்பெருமான் முன்னே சென்று சேர்ந்தால் தூயவராவர். அவர் மேலான கதி அடைவர் என்பது சூரபதுமன் சேவலும் மயிலுமாகி முருகப்பெருமானுக்குச் சேவை செய்வதிலிருந்து தெளிவாகின்றது.

— க. சி. குலரத்தின

(கல்வி வெளியீட்டுத்திணை



இன்று மகாகும்பாபிஷேகம் நடைபெறும் பேராதனைப் பல்கலைக்கழக முருகன் கோவில் தோற்றம் இது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கும்பாபிஷேக விளக்கம்

அங்கிங்கெனாதபடி உயிருக்குயிராக நீக்கமற பரிபூரணத்துவம்பெற்று, நிறைந்திருக்கின்ற அருவ நிலையில் உள்ள, எம்பெருமான், பக்தர்களுக்கு அருள் பாலிக்கும் பொருட்டு எடுத்து ஆட்கொண்டருளிய திருக்கோலங்கள் பல. அவற்றுள் சில. படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்ற பஞ்சகிருத்தியத் தொழில்களை விளக்க வல்லன.

பஞ்சபூதங்களெனப்படும் ஆகாயம், காற்று, நெருப்பு, நீர், நிலம் என்ற ஐம்பூத வடிவாக இறைவன் விளங்குகிறான். இதனை மாணிக்கவாசகப் பெருமான், திருவாசகத்தின் போற்றித் திரு அகவலில் பின்வருமாறு நோக்கத்தகப் பாலது.

"பாரிடை ஐந்தாய் பரந்
தாய் போற்றி
நீரிடை நான்காய் திகழ்ந்
தாய் போற்றி
தீயிடை மூன்றாய் திகழ்ந்
தாய் போற்றி
வளியிடை இரண்டாய்
மகிழ்ந்தாய் போற்றி
வெளியிடை ஒன்றாய் விளைந்
தாய் போற்றி"

## கோயிலில் இறைவன்

பரிபூரணப் பொருளாகிய இறைவனுடைய தெய்வீகச் சக்தி எல்லாவிடத்திலும், நிறைந்து காணப்பட்டாலும், அதனை இலகுவில் எல்லோராலும் உய்த்து உணர்ந்து கொள்ள முடியாதிலை.

ஆகாய வெளியில் பரந்து இருக்கின்ற மின்சக்தியை, முறையாக அமைக்கப்பட்ட வானொலிப் பெட்டி மூலமாகக் கேட்பதைப் போலவும்.

பசுவின் உடல் எங்கணும் பால் பரவியிருந்தாலும், பசுவின் மடியிலுள்ள முலைக் காம்புகள் மூலமாகப் பாலை பெறுவதைப் போலவும்.

எங்கும் வியாபித்துள்ள இறைவனின் அருட்சக்தியைப் பெற்று அனுபவிக்க முறைப்படி கோயில் அமைக்கப் பெற்று, விதிப்படி கும்பாபிஷேகம் நடைபெறுகின்றது.

ஒவ்வொரு தத்துவக் கருவுலங்களைத் தன்னகத்தே கொண்டதாக அமைவு பெற்றுள்ளது, குறிப்பிடத்தக்கதொன்றாகும்.

கும்பாபிஷேகம் நடைபெறுங்காலை யாகசாலை நிறுவி அங்கு அந்தணர்கள் வேதமந்திரங்களைக் குற்றமற ஓதி, தங்கள் 'வாக்சக்தியை' தண்ணீர் நிறைந்துள்ள செப்புக் கலசங்களில் நிரப்புவார்கள்.

மற்றைய உலோகங்களிலான கலசங்களிலுள்ள நீருக்கு, ஒலி அலைகளை வாங்கி வைத்துக் கொள்ளும் சக்தி மிகக் குறைவு.

யாகசாலைகளில் கலசங்களுக்கு அடியில் பகரையான

— மா. சிவராமகிருஷ்ணன் —

எல்லாவிடத்தும் பரந்து கிடக்கும் தெய்வீகச் சக்தியை. ஆலயத்தில் சேகரித்து பக்தர்களுக்குச் சிறிது, சிறிதாக பகிர்ந்தளிப்பதே, கோயில் கட்டி, கும்பாபிஷேகம் நடாத்தி, இறை வழிபாடு செய்வதன் நோக்கமாகும்.

மின்சக்தி ஆகாயத்தில் எங்கணும் பரந்து இருந்தாலும், அதனைப் பெறுவதற்கு ஒரு முறைமை இருப்பதைப் போலவும், ஒலிச் சக்தியை ஆகாயத்திலிருந்து பெற்றுக் கேட்டு அனுபவிக்க ஒரு சாதனம் இருப்பதைப் போலவும், பசுவின் உடல் எங்கணும் பால் பரந்து இருந்தாலும், அதனைப் பெற ஒரு வழிவகை இருப்பதைப் போலவும், எங்கும்வியாபித்துள்ள இறைவனின் அருட்பெருஞ் சக்தியை ஆலயத்தில் சேகரித்து வைப்பதற்கும் ஒரு முறை உள்ளது. அதனைப் பொதுப்படையாகக் கும்பாபிஷேகம் என்பர்.

குடமுழுக்கு எனப்படும் கும்பாபிஷேகம், பல அங்கங்களைக் கொண்டது. அவற்றுள் முக்கியமானவை கர்மாநம்பம், அனுக்ஞை, பிரவேசபலி, கிராம சாந்தி, நவக்கிரகஹோமம், திசாஹோமம், ரக்ஷோக்னஹோமம், வாஸ்து சாந்தி மிருத்சங்கிரணம், அங்குரார்ப்பணம், ரக்ஷாபந்தனம், கடஸ்தாபனம் அதிவாசம்பிம்பயாகம் பிம்பசுத்தி கும்பாபிஷேகம் எனப்படுவனவே அவை.

ஒவ்வொரு கிரியையும் தானியங்களை முளைக்க வைத்து கலசநீரின் ஒலி அலைகளைத் தம்பால் ஈர்ந்து கொள்ளும் சக்தியை அதிகரிக்கச் செய்வர்.

இப்படிச் சேகரித்து சேமித்து வைத்த தெய்வீக சக்தியை, தங்கம் அல்லது வெள்ளி போன்ற (ஈர்ந்து கொள்ளும் சக்தி குறைந்த) உலோகக் கம்பிகளின் மூலமாக, சிப்பி செதுக்கிய சிலைகளுக்கும், அதன் அடியில் வைக்கப் பட்டிருக்கும் உலோக யந்திரத் தகடுகளுக்கும், பரிமாற்றம் (Transfer) செய்வர். இதன்பின் வெறுங் கல்லாயிருந்த சிலை அருள் பாலிக்கும் தெய்வீகத் தன்மையைப் பெறுகின்றது.

அடியார்களுக்கு அருள் பாலிக்குந் தோறும் தெய்வீகச் சக்தி படிப்படியாகக் குறைந்துபோவதால் பன்னிரு ஆண்டுகளுக்கு ஒரு முறை தெய்வீகச் சக்தியை மீண்டும் சேகரித்து, சேமித்துவைக்கும் பொருட்டு கும்பாபிஷேகம் நடத்துதல் வேண்டும் என்பர். இது சக்தியிழந்த மோட்டார் வண்டியின் பாட்டரியை திரும்பவும் சக்தி பெறச் செய்வது (Charging) போன்றதாகும்.


எனவே கல்லினாலோ, செம்பினாலோ உருவாக்கப்பட்ட விக்கிரகத்தினை, கோயில்களில் பிரதிஷ்டை செய்து கும்பாபிஷேகம் நடாத்துவதில் தத்துவக் கருத்துக்கள் பொதிந்துள்ளதை நாம் காணலாம்.

கோயில்களில் நித்திய பூசை, அபிஷேகம் முதலியன நடைபெற வேண்டும். சிலைகளுக்குத் திருமுழுக்காட்டுதலை சிவப்பிரகாசர் பிரபுலிங்க லீலையில் மாயை பூசைகதி என்ற பகுதியில் அழகாக இயம்பியுள்ளார். அப்பாடல் பின்வருமாறு:-

"துயிலமுடன் ஆனிடத்
தைந்து ஐயமுத
நறுநெய் பால்தயிர் செழுந்
தேன்
வயலினெழு கரும்புடைத்
துக் கொள்
சாறு, பழம் பிழிந்த மது
ரச் சாறு
புயலளவு தாழை இளநீர்
நறுஞ்சந்தனக் குழம்பு
போற்று நூலின்
இயலினிமை தவனமிவை
ஒன்றன் பின்
ஒன்று முறை இறைவற்கு
ஆட்டி."

## லைசென்ஸ் யாருடையது

யாழ் மாநகரசபை கட்டடத்துக்கு அருகில் திரு சின்னராசா என்பவர் ஒருமோட்டார்கார்லைசென்ஸ் ஒன்றை கண்டெடுத்து ஈழநாடு காரியாலயத்தில் ஒப்படைத்துள்ளார். உரியவர் பெற்றுக்கொள்ளலாம்.



பேராதனைப் பல்கலைக்கழக முருகன் கோவிலில் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ள விநாயகப் பெருமான்.

# நாட்டிலும் நகரிலும்

உலகமெங்கும் மாணவர்கள் ஆர்ப்பாட்டம் செய்வது எதற்காக என்று இப்பொழுது இவருக்கு விளங்கிவிட்டது. கொழும்பில் வெளியாகும் ஓர் ஆங்கிலப் பத்திரிகையில் வந்த செய்திதான் இந்தத் திடீர் ஞானோதயத்துக்குக் காரணம்.

வெலிகாமத்தில் [வலிகாமம் அல்ல] ஒரு மகாவித்தியாலயமாம். அதில் நூறு மாணவ மாணவிகள் சமீபத்தில் நடந்த ஜி. சி. ஈ. பரீட்சைக்குத் தோற்றினார்கள். முடிவுகள் வெளிவந்த போது மாணவர்கள் மாணவிகள் ஆசிரியர்கள் ஆசிரியைகள் எல்லோருக்கும் பேரதிர்ச்சி உண்டானதாம். ஏனென்றால் நூறு பேரில் ஆக மூன்றே மூன்று பேர்தான் பரீட்சையில் சித்தி!

மாணவ மாணவிகளுக்கு ஆத்திரம் வராதா, என்ன? ஆசிரியர்கள், அதிபர்கள், கல்விப் பரீட்சைப் பகுதி, அரசாங்கம் எல்லோருக்கும் ஒரு பாடம் படிப்பிக்கவேண்டுமென்று எண்ணிய மற்ற தொண்ணூற்றேழு பேரும் வகுப்புகளிலுள்ள மேசை, நாற்காலிகள் எல்லாவற்றையும் உடைத்தெறிந்து, கூரைக்கு நெருப்பு வைத்து, ஆசிரியர்களின் சைக்கிள்களின் காற்றைத் திறந்துவிட்டு, ஆசிரியைகளின் சேலைக்கு மை தெளித்து, பாடசாலை அதிபரின் காரிலுள்ள பெட்ரோல் தாங்கிக்குள் மண் அள்ளிப்போடவில்லை!

அவர்கள் வேறோர் உபாயத்தைக் கையாண்டார்கள், அதாவது கையாள முயன்றார்கள்.

தொண்ணூற்றேழு பேரும் பாடசாலை விளையாட்டு மைதானத்தில் கூடுவது எல்லோரும் ஏககாலத்தில் இரும்பி நாகினி நஞ்சைக் குடிப்பது, எல்லோரும் அப்படியே ரொக்கமாகச் சாவது — இதுதான் அவர்கள் செய்த புத்திசாலித்தனமான முடிவு.

அதிர்ஷ்ட வசமாகவோ துரதிர்ஷ்ட வசமாகவோ அவர்களுடைய இரகசியம் பரகசியமாகிவிட்டது. ஆசிரியர்களுக்கும் பெற்றோர்களுக்கும் அது அம்பலமாகிவிட்டது. தற்கொலைத் தீர்மானம் கைவிடப்பட்டது.

இந்தச் செய்தியைப் படித்துவிட்டு அழுவதா சிரிப்பதா என்று தெரியவில்லை. சிரிப்புக்குரிய விஷயமா இது? அழத்தான் வேண்டும்.

மேற்படி மகாவித்தியாலயத்தில் மட்டுமன்றி இலங்கையின் வேறு பல பாடசாலைகளிலும் ஜி. சி. ஈ. பரீட்சையில் சித்தியடைந்தவர்களின் தொகை மிக மிகக் குறைவு என்று கேள்வி.

இதற்குக் காரணம் என்ன? மாணவர்களின் கல்வித் தராதரம் குறைந்துவிட்டதா? இதை இன்னொரு வகையில்சொல்லப்போனால் ஆசிரியர்களின் போதிக்கும் திறன் குறைந்துவிட்டதா என்றும் சொல்லாம். அல்லது கல்விப் பகுதிப் பரீட்சையாளரின் தரம் உயர்ந்துவிட்டதா?

இவைப்பற்றிய ஒரு கல்லூரி ஆசிரியரை இதுபற்றிக் கேட்டேன். அவர் இளைப்பாறிவிட்டதனாலோ என்னவோ, சட்டம்பிமார் சரியாய்ப் படிப்பிக்கவில்லை என்று ஒரே அடியாகப் போட்டுவிட்டார்.

காரணம் எதுவாயிருந்தாலும் இதைப் பற்றி நமது கல்வி அமைச்சர் சற்றே சிந்தனை செய்யவேண்டியது மிகவும் அவசியம்.

—வழிப்போக்கன்

## மயிலிட்டி கி. ச. தலைவர் தெரிவு

காங்கேசன்துறை, புதன் மயிலிட்டி கிராமசபைத் தலைவர் தெரிவு இம்மாதம் இறுதியில் நடைபெற விருக்கிறது.

காங்கேசன்துறை பாராளுமன்றத் தேர்தலில் தமிழ்க் காங்கிரஸ் கட்சி சார்பில் போட்டியிட்ட திரு. க. ஸ்ரீ. பாஸ்கரன், தமிழரசுக் கட்சிப் பிரமுகரான ஊழக்கிழிஞர் திரு. வ. இராசநாயகம் ஆகிய இருவருமே இக்கிராமசபைத் தலைவர் தெரிவுக்குப் போட்டியிடுவார்கள்.

கௌரிமனோகரி தாளம்: ஆதி

## ...யருளுந் தெய்வம்

(என். வீரமணி)

**பல்லவி**


...ருளுந் தெய்வம் கந்தா நீயன்றோ!
... வரதனே கடம்பனே செந்தமிழ்க்

**அனுபல்லவி**

...ருளி வாழ்வில் நெஞ்சம் குளிரவைக்கும்
...து வடிவுருவில் சிங்கார மாயபல.

**சரணம்**

... மணமலரின் மாலையணியும் மார்பா
...ப் பிடித்துநின்று விளங்கிடும் சுப்பிரமணியா
...பிடித் தேவயா காத்தருள் வாய்ஜயா
... மனோகரி களிக்கும் உமைபாலா.



பேராதனைப் பல்கலைக்கழக முருகன் கோவிலில் எழுந்தருளியிருக்கும் வள்ளி தெய்வானை சமேத முத்துக்குமாரசாமி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "சட்டமும் சமயமும் சமூகத்தை நல்வழிப்படுத்துகின்றன"

வெள்ளவத்தை, புதன்

'சமய மறுமலர்ச்சியின் கர்த்தாவும் ஐந்தாவது சமய குரவர் என உலகம் வியந்தேத்துபவருமான நாவலரின் பெயராலும் இந்து மாமன்றத்தை அமைத்து அளப்பரிய சேவையாற்றிய சேர் கந்தையா வைத்தியநாதரின் நாமத்தாலும் தங்கப்பதக்கங்கள் வழங்குவது மிகப் பொருத்தமானது. இது அவர்களுக்கு நல்லதொரு நினைவுச் சின்னங்களாகும்'

இவ்வாறு இலங்கைச்சட்ட மாணவர் இந்து மகா சபை நடாத்திய சமயப் பேச்சுப் போட்டிக்குத் தலைமைவகித்த மகாசபைத் தலைவர் திரு. வ. க. நீலகண்டன் பேசுகையில் கூறினர்.

திருவாளர் ஸ். சி. இரங்கநாதன் கியு. சி., அகில இலங்கை இந்துமான்ற உபதலைவரான திரு. எஸ். சோமசுந்தரம் ஓ. பி. ஈ. உள்நாட்டு இறைவரித் திணைக்கள ஆணையாளர் திரு. எஸ். சிற்றம்பலம் ஆகியோர் போட்டிகளுக்கு நடுவர்களாகக் கடமையாற்றினர்

திரு. சி. இரங்கநாதன் கியு. சி. பேசுகையில், சட்டமும் சமயமும் சமுதாயத்தை நல்லவழிகளில் வழிநடத்துபவை. ஆத்மீக முறையில் சமயமும் நீதி முறையில் சட்டமும் வழிநடத்துகின்றன. சட்டம் பயிலும் மாணவரிடையே இத்தகைய சமய ஆர்வமும் திறமையுங்கண்டு நானும் சகோதர மத்தியஸ்தர்களும் உவகைகொள்ளுகிறோம்' என்று கூறினர்.

முதலாவது இடத்தைப் பெற்ற திரு. ஆர். பி. சபாரத்தினம் நாவலர் தங்கப் பதக்கத்தையும், 2-வது இடத்தைப்பெற்ற திரு. என். ஆர். பெர்னாண்டோ சேர் கந்தையா வைத்தியநாதன் பதக்கத்தையும் பெற்றனர்.

# 'சமூக குறைபாட்டு சட்டத்தின் கீழ் ஆலயங்களுமா?

## சைவசித்தாந்த சபை கேட்கிறது

அளவெட்டி, புதன்

வேதசிவாகம முறைப்படி நடக்கும் சைவசமய ஆலயங்களை தேநீர்க்கடை, சலூன், சலவைத்தொழிற்சாலை போன்ற சமூக நிலையங்களாகக் கணித்து சிவாகம விதிக்கு மாறாக சமூகக்குறைபாட்டுச் சட்டத்தின் உதவியுடன் ஆலயப்பிரவேசம் செய்ய எத்தனிப்பதை இம்மகாநாடு கண்டிக்கின்றதென்றும் சைவாலயங்கள் ஆகம முறைப்படி நடத்தப்படவேண்டுமென்றும் ஆதலினல் சைவாலய தர்மகர்த்தாக்கள் அதற்குவேண்டிய நடவடிக்கை எடுக்கும்படி இம்மகாநாடு கோவில் தர்மகர்த்தாக்களை கேட்டுக்கொள்ளுகிறது என்ற தீர்மானம் நேற்று கீரிமலை ஸ்ரீ வைத்திலிங்கம் மடாலயத்தில் நடைபெற்ற அகில இலங்கை வேதாகம சைவ சித்தாந்த சபையின் நாற்பதாவது மகாநாட்டில் நிறைவேற்றப்பட்டது.

## நியமனம் கிடைக்கும்

உடுப்பிட்டி, புதன்

கஷ்டப்பட்ட தாதிகளில் 30 பேருக்கு ஆசிரியர்பதவி வழங்க அரசாங்கம் முடிவு செய்துள்ளது. இவ்வாசிரியர்களை தெரிவுசெய்வதற்கான அறிவித்தல் விரைவில் வர்த்தமானியில் வெளியிடப்படும்.

உபசபாநாயகரும், உடுப்பிட்டி எம். பி. யுமான திரு எம். சிவசிதம்பரம் மேற்கண்ட தகவலைத் தெரிவித்தார். ஆசிரியர் பயிற்சி கலாசாலையில் தராதரப் பத்திரம் பெற்ற ஆசிரியர்களில் 75 பேரை தெரிந்தெடுக்கவும் முடிவுசெய்யப்பட்டுள்ளதாகவும் திரு. சிவசிதம்பரம் தெரிவித்தார்.

## சங்கம் அமைக்க முயற்சி

உடுப்பிட்டி, புதன்

வடமராட்சிப் பகுதியிலுள்ள ஸ்தலஸ்தாபன சபைகளில் இலவச ஆயுர்வேத வைத்தியசாலைகளில் பணியாளர்களாக (டிஸ்பென்சர்) கடமையாற்றுபவர்கள் தமக்கென ஒரு சங்கம் அமைக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளதாக அறியப்படுகிறது.

## இன்றைய பலன்

[6 - 6 - 68]

வைகாசி மீ 24 உ

வியாழக்கிழமை

திதி - தசமி, பகல் 1-47 மேல் ஏகாதசி.

நட்சத்திரம் - அத்தம் பகல் 3-36 மேல் சித்திரை.

ராகுகாலம் - 1-22—2-52.

சுபநேரம் - 7-22—8-52.

இன்று பிறந்தவர்களுக்கு!— உற்சாகமும், உவகைப் பெருக்கும் தாராளமாக உண்டு. காதல் உலகில் கனிவான சம்பவங்கள் இடம் பெறும். திருமணமானவர்களின் வாழ்க்கையில் அன்பும் அமைதியும் நிலவும். தொழில் செய்யும் இடத்தில் மேலதிகாரிகளின் ஆதரவு அவசியம் கிடைக்கும். அரசியல்வாதிகளுக்கு பெரும் புகழ் கிடைக்கும் அவசர முடிவைத் தவிர்த்து, நிதான புத்தியுடன் நடப்பின் சகல துறைகளிலும் முன்னேற்றமுண்டு.

மேஷம்-சோர்வு மிகுதி, குறை கேட்க நேரிடும்.

ரிஷபம்- புகழில் உச்சி, சுவை தரும் வாழ்வு.

மிதுனம் - பண்பான செயல், பாராட்டுக் கிடைக்கும்.

கடகம் - எதிர்பார்த்தது கிடைக்கும். கவலை வேண்டாம்.

சிம்மம் - தொல்லை தாக்கும், துணிவே துணை.

கன்னி - ஓய்வுக்கு இடமுண்டு, நாவடக்கம் நன்று.

துலாம்- குடும்பம் சிறக்கும், செல்வாக்கும் பெருகும்.

விருச்சிகம் - இரும்பு மனம், இருண்ட வாழ்வு.

தனுசு- நல்ல முடிவு, நன்மைகள் சேரும்.

மகரம் - பாக்கிய விருத்தி, பரோபகாரச் சிந்தை.

கும்பம் - கழுகுப் பார்வை, கவலையின் தாக்குதல்.

மீனம்- திருமணம் கலக்கும், இனிமையும் பிறக்கும்.

— சோதிடக் கலாநிதி —

திருமலை வேலுப்பிள்ளை

### ஆசிரியருக்கு கடிதம்!

## வைகாசி விசாகம் எப்போது?

கீலக வருடத்தில் வைகாசி விசாகம், வைகாசி மாதம் 27-ம் திகதி [9-6-98] ஞாயிற்றுக்கிழமை என்று கொக்குவில் வாக்கிய பஞ்சாங்கத்தில் குறிப்பிட்டுள்ளார்கள். மேற்படி பஞ்சாங்கத்தில் விசாகம் 26-ந் தேதி சனிக்கிழமை பகல் 17, 16 நாழிகை[12-46பி.ப.]முதல் ஞாயிற்றுக்கிழமை பகல் 13, 12 நாழிகை [11-09 மு. ப] வரை இருக்கிறது.

விரோதிவருட (1949) பஞ்சாங்கத்தில் வைகாசி விசாகம் வைகாசி 26-ம் திகதி [8-6-49] பகல் 16.43 நாழிகை முதல் (12.33 பி. ப.) மறுநாள் 13 36 நாழிகைவரை (11.18மு.ப.) இருப்பதாகவும் 26-ம் வைகாசி விசாகம் என்றும் குறிப்பிட்டுள்ளார்கள். கொக்குவில் திரு. இராசதுரை வெளியிட்ட கீலக வருடப் பஞ்ஞாங்கத்தில் வைகாசி 26-ம் திகதி சனிக்கிழமை வைகாசி விசாகம் என்று குறிப்பிட்டுள்ளார்.

ஆதலால் சைவமக்களின் நன்மையை முன்னிட்டு வைகாசி விசாகம் கொக்குவில் வாக்கிய பஞ்சாங்கத்தார் விரோதி வருஷ நிர்ணயம்செய்த வைகாசி விசாகம் சரியா என்பதையும் கீலக வருஷம் வைகாசி விசாகம் எந்த நாள்? ஆலயங்களில் நிகழவேண்டும் என்பதையும் இந்தப் பத்திரிகை வாயிலாக வெளியிடவேண்டுமெனக் கோருகிறேன்.

வை. இராமநாதக் குருக்கள்

வண்ணார்பண்ணை.

## சுவர்களில் கிறுக்கல்கள்

சுழிபுரம், புதன்

சுழிபுரம் — திருவடிநிலை தீர்த்தக்கரை தீர்த்தமண்டபம் கரிக்கட்டிகளால் கிறுக்கப்பட்டும் தகாதவார்த்தைகள் எழுதப்பட்டும் மிகவும் கேவலமான நிலையில் காணப்படுகின்றது. தனிப்பட்டவர்களின் குற்றங்குறைகளைக் கோடிட்டுக் காண்பிக்கும் வகையில் வசனங்கள் எழுதப்பட்டுள்ளனவாம்.

## நகைத்திருட்டு

நெடுந்தீவு, புதன்

நெடுந்தீவு காரியாதிகாரி கந்தோரில் கடமையாற்றும் ஊழியர் ஒருவரின் வீட்டில் பட்டப்பகலில் 2500 ரூபா பெறுமதியான நகைகள் களவாடப்பட்டு விட்டதாகவும் களவு நடைபெற்ற நேரத்தில் வீட்டில் ஒருவரும் இருக்கவில்லை எனவும் சொல்லப்படுகிறது.

### விதிசெய்த சதியோ?

யாழ்ப்பாணம், புதன்

படுத்திருக்கும்போது மேல் கூரையிலுள்ள தடிபொன்று தலையில் வீழ்ந்ததால் வயோதிபர் ஒருவர் மரணமானாராம். இச் சம்பவம் சங்கானையில் நடைபெற்றது

சங்கானையைச் சேர்ந்த சுப்பர் என்ற (88 வயது) வயோதிபரே மரணமானவராவார். இம் மரணம் சம்பந்தமாக திடீர் மரண விசாரணை அதிகாரி திரு. என். [illegible] விசாரணை நடாத்தினர்.

# 'திட்டமற்ற போக்கினல் கல்வி பாதிக்கப்படுகிறது'

## தமிழாசிரியர் சங்கதலைவர் கண்டனம்

உரும்பராய், புதன்

''மாணவர்களிடையே போட்டிகள் புதுவகையான புத்துணர்ச்சியை ஏற்படுத்தி வரும் ஆசிரியர்களுடைய நிலை நம் நாட்டில் சிறிது கூட உயர்ந்தபடியாகவில்லை. இந்த நாட்டில் கல்வி சம்பந்தமாக முன்னேற்றமான காரியங்களை சாதித்துவிட்டோமென்று அரசாங்கம் கூறிய போதிலும் இந்நாட்டின் கல்வி நிலை முன்னேறியிருப்பதாக எந்தக் கல்விமானும் சொல்லமாட்டார். இதற்கெல்லாம் காரணம் ஆசிரியர்களிடையே ஏற்பட்ட விரக்தி மனப்பான்மையே. திட்டமற்ற இடமாற்றங்களாலும் புதிய புதிய பல திட்டங்களினாலும் ஆசிரியர்களும், மாணவர்களும் வீணே அலைக்கழிக்கப்படுகிறார்கள். இந்த நிலைமாற ஆசிரியர்கள் எல்லோரும் ஒன்று திரண்டு ஆசிரியர் சங்கங்களை பலப்படுத்த வேண்டும்.''

மேற்கண்டவாறு சென்ற ஞாயிற்றுக்கிழமை நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியில் நடைபெற்ற வலி கிழக்குத் தமிழாசிரியர் சங்கப் பேச்சுப் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய வட இலங்கைத் தமிழாசிரியர் சங்கத் தலைவர் பண்டிதர் ச. பொன்னுத்துரை கூறினர்.

வலி கிழக்குத் தமிழாசிரியர் சங்கத் தலைவர் திரு. க. இ. குமாரசாமி தலைமையில் நடைபெற்ற இப்பரிசளிப்பு விழாவில் ஆசிரிய மணி ம. வைத்திலிங்கம் மாணவர்களின் பேச்சுத் திறனைப் பாராட்டினர்.

பங்கு பற்றிய பல பாடசாலை பலவற்றுள் உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாசாலை 29 புள்ளிகளைப் பெற்று முதலிடத்தையும், ஆவரங்கால் மெ. மி. பாடசாலை 19புள்ளிகளைப்பெற்று இரண்டாம் இடத்தையும், கோப்பாய் சரவணபவானந்த வித்தியாசாலை 15புள்ளிகளைப் பெற்று மூன்றாம் இடத்தையும் பெற்றுக் கொண்டன.

## நீதியரசரின் கவலை

வெள்ளவத்தை, புதன்

''தமிழ் மிகவும் பண்பட்ட தொன்மை வாய்ந்தவொரு இனிய மொழியாகும் பாரிஸவ் போன்ற பிறநாட்டு அறிஞர்களும், போப்பையர் போன்றவர்களும் ஆராய்ச்சி செய்து பெருமைப்படுத்தப்பட்டது நம் தமிழ். இத்தகைய தமிழுக்கு இன்று ஈழத்தில் உரிய அந்தஸ்து அளிக்கப்படவில்லை என்பது ஆழ்ந்த கவலைக்கு உரியது. எமது மாணவர்கள் விஞ்ஞானம் கலைத்துறைகளில் பெரிதும் முன்னேற வேண்டும்,''

இவ்வாறு நீதியரசர் திரு. வீ. சிவசுப்பிரமணியம் பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடைபெற்ற இலங்கை சட்டக் கல்லூரித் தமிழ்மன்ற முத்தமிழ் விழாவிற்குத் தலைமை வகித்துப் பேசுகையில் கூறினர்.

'மரண தண்டனை நீக்கப்படல் வேண்டும்' என்னும் விடயம் பற்றி நடைபெற்ற விவாத அரங்கில் வாதிகள் தரப்பில் செல்வன்கள் இ. ஆ. ஜெகதீசன், ஆ. தம்பாபிள்ளை, மா. யோகி டொமினிக் ஆகியோரும், பிரதிவாதிகள் தரப்பில் செல்வி சாந்தினி லோகிதராசா, திரு. க. வே. மகாதேவன், ஜனாப் யூ எல். ஏ. மஜீத் ஆகியோர் கலந்து கொண்டு திறம்பட விவாதித்தனர்.

பாரிஸ்டர் செல்வி செ. சின்னையா 'அருள்மறை' என்னும் விடயம் பற்றிச் சொற்பொழிவாற்றினர்.

## தொழிலாளர் பிரதிநிதிகள்

கொழும்பு, புதன்

இலங்கைப் போக்குவரத்துச்சபை நிர்வாகிகள் சபைக்கு ஒரு தொழிலாளர் பிரதிநிதியும் நியமிக்கப்பட்டதைத் தொடர்ந்து அரசாங்க கூட்டு ஸ்தாபனங்களின் நிர்வாகசபைகள் ஒவ்வொன்றிலும் தொழிலாளர் பிரதிநிதி ஒவ்வொருவரை நியமிக்கும்படி அந்தந்த கூட்டு ஸ்தாபனங்களுக்குப் பொறுப்பான அமைச்சர்களைப் பிரதமர் கேட்டிருப்பதாகத் தெரிகிறது.

## தொண்டர்படை அவசியம்

உடுவில், வியாழன்

கிராமத்தை சுத்தமாக வைத்திருக்கவேண்டுமானால் இளைஞர் தொண்டர்படைகள் கிராமம்தோறும் அமைக்கப்பட்டு சிரமதானபணி மூலம் அவற்றை நிறைவேற்றுதல் மிகச் சுலபம். எதிர்கால நல்வாழ்வுக்காகஇளம் சந்ததியினர் சிரமதானத்தில் ஆர்வம் காட்டுதல் அவசியம்.

இணுவில் அம்பலவாணர் கந்தசாமிகோவில் உற்சவத்தைமுன்னிட்டு நடைபெற்ற சிரமதான முறைச்சுகாதார சேவைப்பணியை ஆரம்பித்துவைத்து தொண்டர்கள் மத்தியில் உரை நிகழ்த்திய வலிகாமம் வடக்கு காரியாதிகாரி திரு. பி. எல். பற்றிக்ஸ் மேற்கண்டவாறு கூறினர்.

## பேனயாருடையது?

யாழ்ப்பாணம், வியாழன்

கோப்பாயைச் சேர்ந்த க. சண்முகராசா என்பவர் நாவலர்வீதியில் ஒரு பேனவைக் கண்டெடுத்து 'ஈழநாடு' காரியாலயத்தில் ஒப்படைத்துள்ளார். உரியவர் தகுந்த அத்தாட்சி காட்டிப் பெற்றுக் கொள்ளலாம்.

## தொண்டர் படை

குரும்பசிட்டி, புதன்

கிராமங்களில் மீண்டும் திருட்டுச் சம்பவங்கள் அதிகரித்துள்ளதால் குரும்பசிட்டி கிராம முன்னேற்றச் சங்கத்தினர் தொண்டர் படையொன்றை அமைத்துள்ளனர். இத்தொண்டர் படையினர் இரவு வேளைகளில் கிராமங்களில் ரோந்து சுற்றி காவல் புரிகின்றனர்.

## "சாதாரண வாழ்வு வாழ்ந்த முஸ்லிம் பெரியார்"

யாழ்ப்பாணம், வியா.

''மறைந்த முஸ்லிம் பெரியார் ஜனப் அப்துல்காதர் பொதுச்சேவையே தன் பணியென சாதாரண வாழ்வு வாழ்ந்தவர். ஏழைகளின் வாழ்வு மலர வாரி வாரி வழங்கியவர்.'' என்று முதலியார் சி. முத்துத்தம்பி காலஞ்சென்ற முஸ்லிம் பெரியார் ஜனப் எம். ஏ. எம் எஸ் அப்துல் காதரின் அடக்கத்தின்பின் பேசுகையில் குறிப்பிட்டார்.

அன்னாரது ஜனஸா ஊர்வலத்தில் யாழ். அரசாங்க உதவி அதிபர், யாழ் மாவட்ட காரியாதிகாரி உட்பட பெருந்தொகையான முஸ்லிம் மக்கள் கலந்துகொண்டனர்.

(கா. நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'மாணவர்களுக்கு ஒழுக்கம் மிகவும் அவசியம்'

## பல்கலைக்கழக விரிவுரையாளர் அறிவுரை

யாழ்ப்பாணம், வியா.

மாணவர்களும் இளைஞர்களும் ஒழுக்கமுடையவர்களாக இருக்கவேண்டியது அவசியம். பெரிய அறிஞர்களும் கலைஞர்களும் ஒழுக்கமுள்ளவர்களாகத் திகழ்ந்தாலேயே மற்றவர்களால் மதிக்கப்படுகின்றார்கள் சாரணியம் என்றாலே ஒழுக்கம் என்பதும் ஒழுங்கை நிலைநாட்டுவதென்பதும் தான் கருத்தாகும்.

இவ்வாறு நேற்று முன்தினம் நடைபெற்ற யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி சாரணர்குழு ஆண்டுவிழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட பல்கலைக்கழக விரிவுரையாளர் கலாநிதி எஸ். நகுலேஸ்வரன் தெரிவித்தார்.

திரு. நகுலேஸ்வரன் மேலும் பேசியதாவது:

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி சாரணர்குழு காப்பாளராக இருந்து கடந்த 30 ஆண்டுகளாகச் சேவை புரிந்து வரும் திரு முத்துக்குமாரன் அவர்களின் தன்னலமற்ற சேவை பாராட்டப்பட வேண்டியதாகும். வருடாவருடம் சாரணர் இயக்கங்களில் இந்துக்கல்லூரி சாரணர்கள் பெற்று வரும் பரிசில்களைப் பார்க்கும்போது 1971-ம் ஆண்டில் இவர்கள் எல்லாப் பரிசில்களையுமே பெற்றுவிடுவார்கள் எனத் தோன்றுவதில் எந்த ஐயமுமே இருக்காது.

ஆசிரியர் திரு எஸ். முத்துக்குமாரன் வருடாந்த அறிக்கையை சமர்ப்பித்துப் பேசுகையில் இந்த நாட்டில் சாரண இயக்கம் நன்கு வளர்ச்சியடைவதில் யாழ்ப்பாணமே பெரும் பங்கு எடுத்து வருகின்றது என்று தெரிவித்தார்.

சாரணர்களின் அணிவகுப்பு பாசறைத் தீ நிகழ்ச்சிகள், கலைநிகழ்ச்சிகள் ஆகியனவும் விழாவில் இடம் பெற்றன.

(கா. நி)

## விளையாட்டுப் போட்டி

கல்வெட்டித்துறை, புதன்

வல்வை பல்ஸ்ராஸ் விளையாட்டுக்கழக வருடாந்த விளையாட்டுப்போட்டி இம்மாதம் 10-ந் திகதி நெடியகாடு சிறுவர்பூங்கா மைதானத்தில் நடைபெறும்.

## 'ஏ' பிரிவு வெற்றி

உடுப்பிட்டி, புதன்

வதிரி சனசமூக நிலையத்தின் ஏ பிரிவுக் கோஷ்டிக்கும் பி-பிரிவுக் கோஷ்டிக்குமிடையே நடைபெற்றவைப் பந்தாட்டப் போட்டியில் ஏ-பிரிவு கோஷ்டி 3 ஆட்டங்களிலும் வெற்றியீட்டியது. திரு. செ. குமாரசாமி மத்தியஸ்தராகக் கடமையாற்றினார்.

## 80 வீதம் சித்தி

அனுராதபுரம், புதன்

கல்விப் பொதுத் தராதர (சாதாரண) பரீட்சையில் அனுராதபுரம் விவேகானந்தா தமிழ் மகாவித்தியாலய மாணவர்களில் 80 வீதத்தினர் சித்தியெய்தியுள்ளனர்.

மத்திய மாகாணத்தில் அனுராதபுரம் விவேகானந்த வித்தியாலயமே பரீட்சை முடிவில் திறமையான பெறுபேறுகளைக் கொண்டுள்ளதாம்.

## விளையாட்டுப் போட்டிகள்

சுழிபுரம், சனி

சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி வருடாந்த விளையாட்டுப் போட்டி இம்மாதம் 8-ம் திகதியும் வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி வருடாந்த விளையாட்டுப்போட்டி இம்மாதம் 23-ம் திகதியும் காரைநகர் யாழ்ட்டன் கல்லூரி வருடாந்த விளையாட்டுப்போட்டி இம்மாதம் 16-ம் திகதியும் நடைபெறவுள்ளன.

## புதிய நிர்வாகிகள்

சுழிபுரம் புதன்

மூளாய் கூட்டுறவு வைத்தியசாலை காரிய அதிகாரசபைக் கூட்டம் சங்கத்தலைவர் திரு ச. சம்பந்தமூர்த்தி தலைமையில் நடைபெற்றது.

புதிய உத்தியோகத்தர்களாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்:

உபதலைவர்கள் வி. இராசசுந்தரம், கே. வயிரவநாதன் செயலாளர் எஸ். கே. சிவானந்தன். தனாதிகாரி எஸ். கே. தர்மலிங்கம்.

## நசுக்கப்படுவதற்கு காரணம்...

உடுப்பிட்டி, புதன்

''சிறுபான்மைத் தமிழரின் உரிமைப்போராட்டம் இன்னமும் தீர்வுகாணப்படாதிருந்தும் தமிழரசுக் கட்சியினர் மாவட்ட சபையைக் கோரியிருப்பது மனிதத்தன்மையான செயலல்ல. தமிழ் மக்களில் ஒரு சாராரை அடக்கி ஒடுக்கித் தமிழ்மக்களில் மறுசாரார் நடத்திவருவதினால் தான் இன்று தமிழினம் சிங்கள மக்களிடம் நசுக்கப்படுகின்றது.

இவ்வாறு அல்வாய் தெற்கு முற்போக்கு வாலிபர் கழகத்தின் பொதுக் கூட்டத்தில் பேசுகையில் வடபிரதேச சமசமாஜ வாலிபர் சம்மேளனத் தலைவர் டாக்டர் திரு. எஸ். எஸ். மாசிலாமணி கூறினார்.

இக்கூட்டம் திரு. வி. கந்தசாமி தலைமையில் நடைபெற்றது.

## உடைமை திருட்டு

முள்ளியவளை புதன்

தம்பலகாமம், முள்ளிப்பொத்தானை என்னுமிடத்தைச்சேர்ந்த எஸ். குப்பைத்தம்பி என்பவர் திருக்கோணமலையிலுள்ள திரியாய் என்னுமிடத்தில் இரவில் ஓர் வீட்டில் தங்கியபோது ரூபா 250, மாடுவாங்கிய அத்தாட்சிப்பத்திரங்கள், டோர்ச் லையிற், சேர்ட் முதலியன திருட்டுப் போய்விட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுசம்பந்தமாகக் குப்பைத்தம்பி திரியாய் கிராம சேவையாளருக்குப் புகார் செய்துள்ளார்.

இவர் கொக்குத்தொடுவாயிலிருந்து 8 மாடுகளை விலைக்கு வாங்கிக்கொண்டு செல்லும் வழியிலேயே இத்திருட்டு நிகழ்ந்தது.

(உடுப். நி.)

## இவ்வாரத்திற்குள் கிடைக்கும்

தருமபுரம், புதன்

வலி. மேற்கு- பால்- சங்கம் இவ் ஆண்டு ஜனவரி முதல் மேமாதம்வரை அங்கத்தவர்களின் பாலுக்கான பணம் வழங்கவில்லை என்றும், அதை உடனடியாகப் பெற்றுத் தரும்படியும் யாழ். மேற்கு கூட்டுறவு ஆணையாளரிடம் சங்கத்தின் நேற்று சங்கானை கிழக்கு அங்கத்தவர்கள் முறையிட்டனர்.

இரண்டு நாட்களுக்குள் அங்கத்தவர்களுக்கு வழங்கப்படும் என்றும், மிகுதி கணக்குப் பார்த்துத் தரப்படுமென்றும் உறுதியளிக்கப்பட்டது.

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

### வியாழன் 6-6-68

செய்திகள்! காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00.

344 மீற்றர் அல் 61 மீற்றர்

காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவநற்சிந்தனை, 6-40 இஸ்லாமிய நற்சிந்தனை, 6-45 அதிப்பாடல்கள், 7-30 தேர்ந்தஇசை, 8-00 திரைஇசை, 8-15 இன்னாமியநிகழ்ச்சி.

344 மீற்றர் அல் 49 மீற்றர்

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்ப இசை.

344 மீற்றர் அல் 61 மீற்றர்

மாலை 5-00 கல்வி ஒலிபரப்பு, 5-15 பிறந்தநாள் வாழ்த்துக்கள், 5-30 மாணவர்மன்றம்.

இரவு 6-15 பாட்டு — நாகலக்ஷ்மி சத்தியவாகீஸ்வரன், 6-45 பாவளம், 7-00 கிராமசஞ்சிகை — வடபிரதேச விவசாய விஸ்தரிப்பு அதிகாரிகள் சம்பாஷணை, 7-30 குங்குமம், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 பாட்டு — ராமேஸ்வரி பாலகிருஷ்ணன்.

## பத்திரிகைகளையும் படிக்க வேண்டும்

யாழ்ப்பாணம், வெள்ளி

''கிராமத்தில் கல்வி வளர்ச்சிக்கு வாசிகசாலை மிக அவசியம். தினந்தோறும் பத்திரிகை படிப்பதனால் நாம் உலகத் தொடர்புச் செய்திகளை அறியமுடிகிறது. வெறும் புத்தகக் கல்வியுடன் நில்லாமல் பத்திரிகைகளையும் படிக்க வேண்டும்'' என்று பூநகரி, மட்டுவில் நாடு கிராம முன்னேற்ற சனசமூக நிலைய வருடாந்த கூட்டத்திற்கு தலைமை தாங்கிப் பேசிய திரு. கே. தனபாலசிங்கம் குறிப்பிட்டார்.

பின் வருவோர் நடப்பு வருட உத்தியோகத்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்:- கே. தனபாலசிங்கம், உபதலைவர்:- கே. சுந்தரமூர்த்தி, செயலாளர்:- என். சூரியகுமாரன், உபசெயலாளர்:- கே. நிற்சிங்கம். பொருளாளர்:- வி. துரைராஜா

ஆறுபேர்கொண்ட நிர்வாகசபையும் தெரிவு செய்யப்பட்டது. [ந. நி]

## சுகாதார அமைச்சருக்கு மகஜர்

அராலி, புதன்

வட்டுக்கோட்டை கிராமிய ஆஸ்பத்திரிக்கு மின்சாரம், பிரசவவிடுதி, வைத்திய அதிகாரிக்கு இருப்பிடவசதி ஆகியவற்றை விரைவில் அமைத்துத் தரும்படி வட்டுக்கோட்டை கிராமச் சபைத் தலைவர் உள்ளூராட்சி அமைச்சர் மூலம் சுகாதார அமைச்சருக்கு அனுப்பிய மகஜரில் குறிப்பிட்டுள்ளது.

## உற்சவம்

கோப்பாய், புதன்

கோப்பாய் வடக்குச் சித்திர வேலாயுத சுவாமி கோவில் வருடாந்த மகோற்சவம் இம்மாதம் 1-ந்திகதி முதல் ஆரம்பமாகி சிறப்பாக நடைபெற்று வருகின்றது.

எதிர்வரும் 9-ந் திகதி இரதோற்சவமும், மறுநாள் தீர்த்தோற்சவமும் நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

## பஸ்ஸிலிருந்து அவசரமாக இறங்கியவர் வீழ்ந்து மாண்டார்

தல்லூர், புதன்

யாழ்ப்பாணத்திலிருந்து கிளிநொச்சி சென்று கொண்டிருந்த பஸ்ஸில் சென்ற பிரயாணி ஒருவர் கிளிநொச்சியில் திடீரென இறங்கிய போது தவறுதலாக நிலத்தில் விழுந்ததால் படுகாயமுற்று ஸ்தலத்திலேயே மரணமானார்.

இச்சம்பவம் நேற்றுமாலை கிளிநொச்சியில் நடைபெற்றது.

அனலைதீவைச் சேர்ந்த என். முருகேசு (வயது 45) என்பவரே இப்பரிதாப மரணத்துக்குள்ளானவர்.

யாழ்ப்பாணத்திலிருந்து பிரயாணம் செய்து கொண்டிருந்த இவர் கிளிநொச்சி பஸ் நிலையத்தில் பஸ் நிறுத்தப்படுவதற்கு முன் அவசரமாக இறங்கியதாலேயே இவ்விபத்து ஏற்பட்டதாகத் தெரிய வருகிறது.

கிளிநொச்சிப் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி திரு லக்ஷ்மன் விஜயதிலகா ஸ்தலத்தில் விசாரணை நடத்தினார்.

மரண விசாரணை நடைபெறுகிறது.

## நெடுந்தீவுமக்கள் கஷ்டம்

நெடுந்தீவு, புதன்

நெடுந்தீவில் இப்போது குடிநீர்க்கஷ்டம் ஏற்பட்டுள்ளதால் இங்குள்ள மக்கள் பெரிதும் அவதிக்குள்ளாகியிருக்கின்றனர்.

மோசமான மோட்டார் படகுச்சேவை, தபால் சேவை, மண்ணெண்ணெய் தட்டுப்பாடு, சீனித் தட்டுப்பாடு இவற்றுடன் குழாய் மூலம் கிடைக்கும் நீருக்கும் தட்டுப்பாடு இப்போது ஏற்பட்டுள்ளது மக்களுக்குப் பெரும் சோதனையாகவிருக்கிறது.

## அமைச்சரை சந்திப்பர்

யாழ்ப்பாணம், வியாழன்

இலங்கை ஆயுர்வேத வைத்திய சபையின் பிரதிநிதிகள் இலங்கையிலுள்ள வைத்தியசாலைகளின் குறைகளை நிவர்த்தி செய்வது எப்படியென்பது பற்றி ஆராய்வுகள் நடாத்துவதற்காக இம்மாதம் 8-ம் திகதி சுகாதார அமைச்சரைச்சந்திக்கவிருக்கின்றனர். [ந. நி.]

## 'கண்ணகிவழக்குரை' நூல்வெளியீடு

மட்டக்களப்பு, புதன்

வித்துவான், பண்டித, வி. சி. கந்தையாவால் எழுதப்பட்டுள்ள ''கண்ணகி வழக்குரை' எனும் நூல் வெளியீடு காரைதீவுக் கண்ணகை அம்மன் கோவில் முன்றலில் அமைத்துள்ள விசேஷ அரங்கில் வரும் ஞாயிற்றுக்கிழமை மாலை 6 30 மணிக்கு வெளியிட்டு வைக்கப்படும்.

மட்டக்களப்பு காரைதீவு இந்துசமய விருத்திச் சங்கத்தாரால் எடுக்கப்படும் சிலப்பதிகார விழா விலேயே இந்நூல் வெளியீடும் நடைபெறவிருக்கிறது.

## ஐ. நா. தினம் கொண்டாட ஏற்பாடு

சுழிபுரம், புதன்

எதிர்வரும் ஐ. நா. தினத்தை சிறப்பாகக் கொண்டாட சுழிபுரத்தில் ஓர் சபை நிறுவப்பட்டுள்ளது. இச்சபையின் அமைப்புக் கூட்டம் சுழிபுரம் விக்டோறியாக் கல்லூரியில் நடைபெற்றது.

விழா அமைப்பாளர்களாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர். தலைவர்:- திரு. ச. சம்பந்தமூர்த்தி, இணைச்செயலாளர்கள்- வி. இராசசுந்தரம், எல். மகாலிங்கம். தனாதிகாரி- இ. ஆறுமுகம்.

## தேவரையாளி இந்துவுக்கு மைதானம்

உடுப்பிட்டி, புதன்

வதிரி தேவரையாளி இந்துக்கல்லூரிக்கு நிரந்தர விளையாட்டு மைதானத்திற்கான காணியை அரசாங்கம் விலைக்கு வாங்கியுள்ளது.

உபசபாநாயகரும், உடுப்பிட்டி எம்.பி. யுமான திரு. மு. சிவசிதம்பரம், வடமாநில வித்தியாதிபதி திரு. எல். தணிகாசலம் ஆகியோரின் முயற்சியினாலேயே இவ் விளையாட்டு மைதானம் கிடைத்துள்ளதாம்.


இறைவன் திருமேனியில்

சந்தனக் காப்பிட்டு

அலங்கரிக்க மிகவும் உகந்த

# பச்சை சந்தனம்

உடனுக்குடன் அரைத்துக் கொடுக்கிறோம்.

என்றும் எங்களிடம் கிடைக்கும்

சுந்தரம் பிரதர்ஸ்

கோவில் அபிஷேகப் பொருட்கள்

மருந்துச்சரக்கு விற்பனையாளர்

73, மின்சார நிலையவீதி, யாழ்ப்பாணம்.

மட்டக்களப்பு ஆனைப்பந்தி

பிள்ளையார் கோவில்

பிரம்ம ஸ்ரீ வி. வரதராசக் குருக்கள்

எழுதுவது:

அன்புடையீர்,

நீங்கள் அனுப்பி வைக்கும் பச்சைச் சந்தனம் சுத்தமானதாகவும் நறுமணமுள்ளதாகவும், தூய்மையாகவும் இருக்கிறது. ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் ஆனைப்பந்தி பிள்ளையாருக்குச் சந்தனக்காப்புச் சாத்தி பணிந்து அருள் பெறுகிறார்கள் அடியார்கள். உங்கள் சேவை தொடர்ந்து நடந்துவர வேண்டுமென்று எல்லாம் வல்ல சித்தி விக்னேஸ்வரனை வேண்டுகிறேன்.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# "விஞ்ஞான மூலம் மெய் ஞானத்தை உணரலாம்"

## சைவசித்தாந்த சபை மகாநாட்டில் பேச்சு

அளவெட்டி, செவ். "சைவத்திற்குரிய நூல்களில் வடமொழி, வேதம், ஆகமம் தென்மொழி. சைவசித்தாந்த சாத்திரம், புராணங்கள், இதிகாசங்கள் இருப்பினும் மூவர் மொழியாகிய தேவாரங்களையே திருமுறைகள் என்று சிறப்பித்துக் கூறப்படுகின்றன. தேவாரங்களுக்குப் பொருள் காணும்பொழுது அவற்றின் சொற்களுக்குப் பொருள் காணுவதைவிட அவை குறிக்கும் செம்பொருள்களை நோக்குவதே சிறந்ததாகும்."

இவ்வாறு கீரிமலை ஸ்ரீ வைத்திலிங்கம் மடாலயத்தில் நேற்று நடைபெற்ற அகில இலங்கை வேதாகம சைவசித்தாந்த சபையின் நாற்பதாவது மகாநாட்டில் 'சைவத் திருமுறை' என்னும் விடயம்பற்றி திரு. ஞா. சபாபதிதேசிகர் உரை நிகழ்த்துகையில் கூறினார்.

சிவஸ்ரீ ச. குமாரசுவாமிக் குருக்கள் தலைமையில் காலை ஆரம்பமாகிய இம்மகாநாடு கீரிமலை சிவன்கோவிலிலிருந்து இறைவணக்கத்துடன் வேதாகம கோஷங்களுடன் வேதாகம சைவ சித்தாந்த ஏட்டுச்சுவடிகள் ஊர்வலமாக விழா மண்டபத்துக்கு எடுத்துச்செல்லப்பட்டது.

சிவஸ்ரீ கு. பாலசுந்தரக் குருக்கள் பேசுகையில் 'சைவத்தை வளர்க்கவும் பாதுகாக்கவும் சைவசித்தாந்தசபைகள் தமிழ் நாட்டில் உள்ளன. ஆனால் அவற்றுடன் வேதங்களையும், ஆகமங்களையும் சேர்த்துக் கொண்ட பெருமை இச்சபைக்கே உரியது" என்றார்.

அகில இலங்கை சைவ அனுட்டானசபைத் தலைவர் திரு. த. சிவலிங்கம் பேசுகையில், இன்றைவரை மெய்ஞ்ஞானம் விஞ்ஞானத்துக்கு முரணானது என்று பலர் கருதினார்கள். ஆனால் விஞ்ஞான மூலம் மெய்ஞ்ஞானத்தை உணரலாம் என்பதை அனேக விஞ்ஞான ஆராய்ச்சியாளர் முடிவு கொண்டுள்ளனர்" என்றார்.

பண்டிதர் வே. சங்கரப்பிள்ளை உட்பட மற்றும் பலரும் உரைநிகழ்த்தினர்.

---

யாழ். நகரில்

# பொலிசார் நடத்திய திடீர் முற்றுகை

## தலைமறைவாய்த்திரிந்த 6 ஐ.ஆர்.சிகள் சிக்கினர்

நல்லூர், புதன் வீதிஓரங்களில் படுத்திருந்தவர்களையும், காரணமின்றி திரிந்துகொண்டிருந்தவர்களையும் நேற்றிரவு யாழ்ப்பாணம் பொலிசார் திடீர் திடீரெனக் கைது செய்தார்கள். பொலிசார் நடத்திய இந்த திடீர் முற்றுகையில் பிரபல ஐ. ஆர். சி. கள் ஆறுபேர் சிக்கிக்கொண்டனராம். மொத்தம் 32 பேர் யாழ்நகரில் கைது செய்யப்பட்டனர்.

களவு, கொள்ளைகளுக்கு காரணமாக இருப்பவர்களென சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்ட 32 பேரையும் யாழ். மேலதிக நீதிபதி டி. டபிள்யு. டடரத்தின முன்னிலையில் பொலிசார் ஆஜர் செய்தனர். நீதிபதி இவர்களை இம்மாதம் 13-ந் தேதிவரை ரிமாண்டில் வைக்கும்படி உத்தரவிட்டார். கைதுசெய்த 32 பேரில் ஆறுபேர் பிரபல ஐ. ஆர். சி. களென கண்டுபிடிக்கப்பட்டதாகத் தெரிகின்றது. இந்த ஆறுபேரும் பல பொலிஸ்நிலையங்களில் தேடப்பட்டவர்களென்றும் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. யாழ்ப்பாணம் பொலிசாரின் இந்த துரித நடவடிக்கையால் பலகாலமாக பொலிசாருக்கு 'டிமிக்கி' கொடுத்துத் திரிந்தவர்களும் அகப்பட்டுக்கொண்டனராம்.

---

## முருகன்..

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

துக் கல்லூரி ஆசிரியர் திரு. என். வீரமணிஐயர் யாத்துள்ளார்.

கண்டியிக் குன்றின் மேல் குமரனுக்கு கலைக் கோயில் எழுப்பிய இந்து மாணவர் சங்கத்தினர் குமரனின் கும்பாபிஷேக விழாவில் கலந்துகொள்ளும் நாகசுர தவில் கலைஞர்களுக்கும், பாராட்டும், பட்டமும், தங்கப்பதக்கமும் வழங்க இருக்கிறார்கள்.

அளவெட்டி என். கே. பத்மநாதனுக்கு "நாகசுர கலாநிதி", கோண்டாவில் ஏ. பாலகிருஷ்ணனுக்கு "நாகசுர கலைமணி", அளவெட்டி வி. என். குமரகுருவுக்கு "லயஞானகலாநிதி" என்னும் பட்டங்களையும், தங்கப்பதக்கங்களையும் யாழ் நல்லூர் இவன் தேவஸ்தானத்தின் சார்பில் பேராதனை இந்து மாணவர் சங்கத்தினர் வழங்க இருக்கிறார்கள்.

இவ்விழாவில் இவர்களின் இசைக் கச்சேரியும் இடம்பெறும். (அள. நி)

---

## குன்ற...

(4-ம்பக்கத் தொடர்ச்சி)

கொண்டருளினார் என்று பலவிடங்களிற் கூறியுள்ளார் அதனாலேயே அவர் கந்தவேள் மாக்கதையை எவரும் படித்தும் கேட்டும் உய்தற்பொருட்டு வசன ரூபத்தில் எழுதினார் என்பர்.

முருகப் பெருமானுக்கும் ஈழவள நாட்டுக்கும் நெடும் பண்டைக்கால முதலாக மிக நெருங்கிய தொடர்பு நிலவி வருகின்றது. வடக்கே மாவிட்டபுரம் முதலாகத் தெற்கே கதிர்காமம்ஈறாக எங்கள் நாட்டிலுள்ள கந்தனாலயங்கள் மிகப்பல. அவர் செய்த அற்புதங்கள் அவற்றிலும் பல. அவரை வழிபட்டுய்ந்த ஆன்மகோடிகளின் எண்ணிக்கை மாணிக்கக் கங்கையெக்கர் மணலிலும் பலவாம்.

---

நெடுந்தீவு. புதன் அரசாங்க மோட்டார் படகு பழுதடைந்தமையால் தபால் போக்குவரத்தும் நடைபெறவில்லை. இதனால் நெடுந்தீவில் தபால் சேவை பாதிக்கப்பட்டதுமின்றி முத்திரை தட்டுப்பாடும் ஏற்பட்டுள்ளது.

---

## ராபர்ட்........

1-ம் பக்கத் தொடர்ச்சி

துப்பாக்கியால் சுட்டவரை திரு. கென்னடியின் ஆதரவாளர்கள் பிடித்துக் கொடுத்தனர்.

இன்று காலை கலிபோர்னியாவின் நகரான லொஸ் ஏஞ்சலிஸில் ஹோட்டல் ஒன்றில் டெலிவிஷனில் பேட்டியளித்துக் கொண்டிருந்த போதே அவர் சுடப்பட்டார். அமெரிக்க மக்கள் இந்தக் கோரக் காட்சியை டெலிவிஷனில் பார்த்தார்கள்.

கலிபோர்னியாவில் அமெரிக்க ஜனாதிபதி பூர்வாங்க தேர்தலில் வெற்றி பெற்றபிறகு லொஸ் ஏஞ்சலிஸில் உள்ள ஹோட்டலொன்றில் தமது ஆதரவாளர்களுடன் டெலிவிஷனில் திரு. றொபேட் கென்னடி பேட்டியளித்துக் கொண்டிருந்தபோதே கூட்டத்துக்குள்ளிருந்து துப்பாக்கி வெடித்ததாகவும், நான்கு நடவைகள் சுடப்பட்டதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. திரு. கென்னடியின் கழுத்தின் பின்புறமாக குண்டொன்று பாய்ந்ததாகவும், தலையிலும் மற்றொரு குண்டு பாய்ந்ததாகவும் முன் வந்த செய்திகள் தெரிவித்தன.

கலிபோர்னியாவில் நடந்த அமெரிக்க ஜனாதிபதி பூர்வாங்க தேர்தலில், உப ஜனாதிபதி ஹம்பிரி, செனட்டர் மக்கார்த்தியைவிட அமோகமான வாக்குகளால் திரு. றொபகட் கென்னடி வெற்றி பெற்ற செய்தி அறிவிக்கப்பட்ட பிறகே திரு. கென்னடி ஹோட்டலில் தமது ஆதரவாளர்களுடன் டெலிவிஷனில் பேட்டியளித்தார்.

கலிபோர்னியா பூர்வாங்க தேர்தலில் தாம் வெற்றி பெறாவிட்டால், அமெரிக்க ஜனாதிபதி தேர்தல் போட்டியிலிருந்து தாம் விலகிக்கொண்டுவிடுவதாகமுன்னர் செனட்டர் றொபர்ட் கென்னடி அறிவித்திருந்தால் இந்தப் பூர்வாங்க தேர்தல் ஒரு முக்கியம் வாய்ந்ததாகவும், அமெரிக்க அரசியல் வட்டாரங்கள், பொதுமக்கள் ஆகியோரின் கவனத்தை வெகுவாக ஈர்ப்பதாகவும் இருந்தது.

கலிபோர்னியா பூர்வாங்க தேர்தலில் செனட்டர் றொபர்ட் கென்னடி 45 சதவிகித வாக்குகளும், உப ஜனாதிபதி ஹம்பிரி 31 சதவிகித வாக்குகளும் செனட்டர் மக்காறி 20 சதவிகித வாக்குகளும் பெற்றிருந்தனர். திரு. றொபர்ட் கென் 10 குழந்தைகளின் தந்தையாவார்.

திரு. றொபர்ட் கென்னடியுடன் இருந்த அமெரிக்க டெலிவிஷன் ஸ்தாபனம் ஒன்றின் டைரக்டர் ஒருவரும் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி காயமடைந்தனர்.

செனட்டர் றொபர்ட் கென்னடியின் கொலை முயற்சி உலகத்தைப் பெருத்த அதிர்ச்சிக்குள்ளாகிவிட்டது.

---

## தவறிவிட்டது

இரண்டு அரைப் பவுன்களுடன் தாலியும் கூடிய தாலிக்கொடி இம்மாதம் 4-ம் திகதி மாலை தவறிவிட்டது. யாழ். ஆஸ்பத்திரி பிரசவவிடுதிக்கும், வெளிநோயாளர் சிகிச்சை நிலைய வெளிக்கேற்றுக்குமிடையிலும், கொட்டடி சீனிவாசகம் வீதியிலிருக்கும் கடைக்கு அருகாமையிலும் தவறியிருக்கலாம். கண்டெடுப்பவர்கள் 'ஈழநாடு' காரியாலயத்தில் ஒப்படைக்கவும் உரிய சன்மானம் வழங்கப்படும் தவறவிட்டவர்கள் [illegible] தினர். 1349

---

## எதிர்க்கட்சி கூட்டணி..

[1ம் பக்கத் தொடர்ச்சி]

குழு தீர்மானித்துள்ளதாக தெரிகிறது. பொதுக்கூட்டம் வைப்பதற்கான இடம் இன்னும் தீர்மானிக்கப்படவில்லை. ஒலிபரப்பி பாவிப்பதற்கு பொலிசாரிடம் எதிர்கட்சியினர் அனுமதி கோரியுள்ளனர்.

எதிர்க்கட்சிக் கூட்டணியின் பொதுக்கொள்கைத் திட்டம் நாளை கைச்சாத்திடப்படவிருக்கிறது. நாளை பார்லிமெண்டிலும் அவசரகாலச் சட்டம் பற்றி எதிர்கட்சியினர் விவாதிக்கவிருக்கிறார்கள்.

# ஆளும் கட்சியிலும் சிலர் ஆட்சேபம்

ஆளும்கட்சிக் குழுக்கூட்டம் இன்று காலை நடைபெற்றபோது சில உதவி மந்திரிகள் உட்பட எம். பிக்கள் சிலர் மாவட்டசபை மசோதாவை இப்போதைக்குக் கொண்டுவரக்கூடாதென்று கோரியதாகவும் இதற்குப் பிரதமர் பதிலளிக்கையில் இதுபற்றி யோசிப்பதற்கு இன்னும் காலமிருக்கிறதென்றும் கூறியதாகவும் தெரிகிறது. இக் கூட்டத்தில தமிழரசுக்கட்சி எம். பிகளும் கலந்துகொண்டனர்.

---

# தீயெரிந்து கிழவரும் வெந்து மாண்டார்

## சண்டிலிப்பாயில் சம்பவம் நான்கு வீடுகள் தீக்கிரை

நல்லூர், வியாழன் சண்டிலிப்பாயில் நேற்று முன்தினம் இரவு நான்கு வீடுகள் தீக்கிரையாகியதில் ஒருவர் வீட்டுக்குள் நித்திரையிலிருந்த முதியவர் ஒருவர் தீயில் வெந்து பரிதாபமாக மாண்டார்.

75 வயதான கே. வைத்தி என்பவர்தான் தீக்கிரையான முதியவராவார்.

சில தினங்களுக்கு முன் துப்பாக்கிச்சூட்டுக்கு ஒருவர் பலியான இடத்திலேதான் இந்த நான்கு வீடுகளும் தீப்பற்றி எரிந்து சாம்பராகின. நள்ளிரவில் நடந்த இத்தீவிபத்து சில விஷமிகளின் செயலினால்தான் ஏற்பட்டதெனப்பொலிசார் கருதுகின்றனர் மாண்ட வைத்தி என்பவரின் மரண விசாரணையில் காங்கேசன்துறை உதவிப்பொலிஸ் சுப்பிரின்டன்ட் திரு. ஆர். ஸி தவராசா, இன்ஸ்பெக்டர் ஜேக்கப் சாட்சியை ஆஜர் செய்தனர். தீவிபத்து ஏற்பட்ட இடத்துக்கு வடபகுதி பொலிஸ் அதிபர் திரு ஆர். சுந்தரலிங்கம் நேற்றுக்காலை சென்று பார்வையிட்டார்.

இரு சமூகத்தினருக்கிடையில் சமீபகாலமாக நிலவி வரும் தகராறு காரணமாகவே இத்தீவைப்புச் சம்பவமும் நிகழ்ந்துள்ளதாகக் கருதும் பொலிசார் சண்டிலிப்பாய், சங்கானைப்பகுதிகளுக்கு மேலதிக பொலிஸ் கோஷ்டியொன்றை அனுப்பி அமைதிக்குப் பங்கம் ஏற்படாதவகையில் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

தீவிபத்து சம்பந்தமாக ஐந்து சந்தேக நபர்களைப் பொலிசார் தேடிவருகின்றனர்.

---

பாவனைப்பொருள் கட்டுப்பாடு

# எத்தனை நாட்களுக்குப் பொறுத்துஇருப்பது?

## சட்டத்தை உடைத்தெறியஆவன செய்வோம் என்கிறார் உடுப்பிட்டி எம். பி.

வல்வெட்டித்துறை, புதன் 'பாவனைப் பொருட்கள் கட்டுப்பாட்டுச் சட்டத்தை நம்மத்தியில் புகுத்தி. வடபகுதி மக்களை மட்டும் 'கள்ளக் கடத்தல்காரர்' என நாமம் சூட்டியிருப்பது பொறுமையையே சோதித்து, பெருத்த வேதனையை அளிக்கிறது. உபசபாநாயகர், என்ற பதவி என்னைத் தடுத்து வைத்திருக்கிறது. ஆயினும் எத்தனை நாட்களுக்கு பொறுத்து பொறுத்து இருப்பது? இந்தச் சட்டத்தை உடைத்தெறிய ஆவன செய்தே தீருவோம்' என்று உபசபாநாயகரும் உடுப்பிட்டி எம். பியுமான திரு. எம். சிவசிதம்பரம் கல்வெட்டியில் அளிக்கப்பட்ட வைபவமொன்றில் பேசுகையில் குறிப்பிட்டார்.

வல்வெட்டி வாலிபர்களால் வல்வெட்டி அ. மி. பாடசாலையில் உபசபாநாயகருக்கு இராப்போசனவிருந்தொன்று அளிக்கப்பட்டது. வல்வெட்டித்துறை நகரசபைத் தலைவர் திரு. நா. பாக்கியலிங்கம் தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் திரு. சிவசிதம்பரம் பேசுகையில் மேலும் கூறியதாவது:-

"வல்வெட்டியும் கல்வாயும் எனக்கு இரு கண்கள் போன்றவை. வல்வெட்டியிலுள்ள இரு பாடசாலைகளையும் விஸ்தரிப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுப்பேன் வல்வெட்டி பொலிஸ் நிலையத்திலிருந்து மணிக்கம்பி தோட்டம்வரை செல்லும் தெருவை திருத்துவதற்கான ஏற்பாடுகள் யாவும் செய்யப்பட்டுவிட்டன. விரைவில் ஒழுங்கை திருத்த வேலைகள் நடைபெறும்.

தலைவர் திரு நா பாக்கியலிங்கம் பேசுகையில், உபசபாநாயகர் திரு. சிவசிதம்பரம் உடுப்பிட்டித் தொகுதியின் முன்னேற்றத்துக்காக செய்த சேவைகளை மக்கள் அறிவார்களென்றும், வல்வெட்டியிலுள்ள பாடசாலைகளை அவர் விஸ்தரிப்பதற்கு நடவடிக்கை எடுப்பார் என்பதில் சந்தேகமில்லையென்றும் கூறினார்.

ஆசிரியர் ஆ. கதிர்காமத்தம்பி, உடுப்பிட்டி அ. மி. கல்லூரி அதிபர் திரு. எஸ். செல்லத்துரை, திரு. ம. மகாலிங்கம், திரு. ச. சிவவீரசிங்கம் ஆகியோரும் பேசினர். திரு. மு. ஆறுமுகசாமி நன்றியுரை கூறினார்.

---

வவனியா, புதன் வவனியா கத்தோலிக்க சமூகசேவா சங்கத்தின் விளையாட்டுப்போட்டி இம்மாதம் 9-ந் திகதி நடைபெறும். வவனியா எம். பி. திரு. ரி. சிவசிதம்பரம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

---

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி 16-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1968-ம் ஆண்டு ஜூன் மாதம் 6-ந்திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org